பாரதமணி

மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ருபா 3

தனிப்பிரதி அணா 4

மாலை 12	JULY 1944 : தாரண ஆடி	முத்து 1

பொருளடக்கம்

விஷயம்		பக்கம்
1. ராக ஆலாபனை	... ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.	... 1
2. மெய் மறந்த சமாதி	... டி. எஸ். ராமாநுஜம், எம்.ஏ., பி.எல்., (லண்டன்)	... 5
3. வேத வியாச பகவான்	... வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல்.	... 12
4. விடுதலை	... வே. ரா. சுந்தரராமன், எம்.ஏ.	... 15
5. ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள்	... ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.	... 19
5. இயந்திரமா அல்லது மாடுகளா ?	... எஸ். சாம்பசிவம்	... 22
7. [illegible]	... திருஷ்ட கர்மா	... 27
	... 'சூடாமணி'	... 32
	... பி. ஸ்ரீ.	... 34
	... பொன்னம்மாள்	... 39

SL
ஊ211/N38&M
N44·12·1.
210093

நீங்கள் சாப்பிடும் ஒவ்வொரு பதார்த்தமும் ஊக்கம் அளிக்கின்றனவா?

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும்) உணவுப்பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. Dept. D109 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்

ஆம்: அளிக்கின்றன. உணவு ஊக்கமளிக்கிறது! ஆனால் எல்லா உணவும் வேண்டிய அளவிற்கு ஊக்கமளிப்பதில்லை. சில அதிகமும், சில குறைவாகவும் அளிக்கின்றன. இங்குதான் ஆரோக்கியத்திற்கு அபாயமிருக்கிறது. நமக்குப் பிரியமான சில உணவுகளில் ஊக்கமளிக்கக்கூடிய சக்தி குறைவாக இருப்பதால் இவ்வுணவுகளிலிருந்து ஊக்கத்தை எதிர்பார்க்கும் ஜனங்கள் விளையாட்டிலோ, வேலையிலோ வெகு சீக்கிரம் களைப்படைகிறார்கள். எல்லா உணவுகளையும் அதிக சக்தி கொடுக்கக் கூடியவைகளாக செய்யலாம்—வைடமன் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்வதால் இயற்கை தரக்கூடிய சக்திப் பொருளையும் அநேக உணவுகளிலில்லாத சத்துக்களையும் டால்டா தருகிறது. நீங்கள் சாப்பிடும் உணவுகளுக்கு அதிக ஊக்கத்தையும் கொடுக்கிறது.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HVM. 35-23-40 TM. THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

தணிக்கையாள் சொல்லுகிறார் . . .

“அழுக்கடைந்த ஆடைகளிலிருந்து அழுக்கைத் தானாகவே போக்கி விடுவதால் சுயமாக வெளுக்கும் சக்தி வாய்ந்ததென்று இதை சோப் செய்யும் ரசாயன சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அதில் வெளுக்கும் ‘சக்தி’ அதிகமாக உள்ளதென்றும் சொல்லுகிறார்கள. ஸன்லைட் சோப்பின் நுரையை ஆடைகளுக்கு இட்டால் அது வெளுக்கும் வேலையை நமக்கு சிரமம் கொடுக்காமல் செய்து விடுகிறது. என்னுடைய சம்சாரமும், தாயாரும் எனக்கு இதை அநேக தடவை சொல்லி இருக்கிறார்கள்.”

ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

இப்பொழுது மெழுகுத் தாளினுள் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது

S. 93-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

நீங்கள் எதை விரும்புவீர்கள்

இன்று ரயில்வேக்கு வேலை அதிகம். ஆகையால பொது ஜனங்களுக்குத் தேவையான பொருள்களை தடங்கலின்றி ஏற்றிவருவதுடன் சண்டைக்கு முன்னிருந்ததுபோல பிரயாணிகளுக்கு இட வசதியும் செய்துகொடுக்க முடியுமென்று உத்திரவாதமளிக்கமுடியாது. பொது ஜனங்களுக்கு இரண்டில் ஏதாவது ஒன்றுதான் கிடைக்கும். இரண்டும் கிடைக்காது. நியாயமாகப் பார்க்கப்போனால் பிரயாணிகளின் சௌகரியத்தைவிட பொது ஜனங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், துணிமணிகள் விறகு மற்ற சாமான்கள் கொண்டு வருவதுதான் முக்கியமானது. போதுமான உணவுப் பொருள்கள் கிடைக்காத இடங்களில் நீங்கள் இருந்திருந்தால், உங்களுக்குப் பசியோடிருக்கும் மக்களுக்குத் தேவையான ஆயிரக் கணக்கான மணங்கு உணவுப் பொருள்களைச் சுமந்து வரும் ரயில் வண்டிகளின் அருமை புலப்படும்.

ஆமாம், பொதுஜனங்களின் பிரயாணம் அவ்வளவு முக்கியமானதல்ல. ஆகையால்தான் பிரயாண வண்டிகள் குறைந்து உணவுப் பொருள்களேற்றிவரும் வண்டி அதிகரித்திருக்கின்றன. அதுவே பிரயாணி வண்டிகளுக்கேற்பட்டிருக்கும் நெருக்கடிக்குக் காரணம். ஆகையால்தான் மிக முக்கியமான வேலைகளைச் செய்ய ரயில்வேக்களுக்கு நீங்கள் உதவி செய்ய விரும்பினால், நீங்கள் வீட்டிலேயே தங்கவேண்டும்.

பிரயாணத்தைக் குறையுங்கள்.

AAA 669—TM.

குழந்தைகளுக்கு
ஆரோக்யம்
அளிக்கிறது
ஏதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம் பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினால் ஏற்பட்ட தாங்கொணாதவலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ.டி.எல். உடனடியான சிகித்சை செய்வதோடு, மேற் கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.
கிரைப் சிரப்
கவர்ன்மெண்டு இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லேபரடரி, மல்லேசுவரம், பெங்களூர்.
ஏஜெண்டுகள்:—மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்.,
தபால் பெட்டி 68, மதராஸ்

"TRAVANCORE INFORMATION AND LISTENER"

● திருவாங்கூர் சம்பந்தமான கட்டுரைகளை ஆசிரியர் விரும்புகிறார். முக்கியமாக ஸம்ஸ்தான சம்பந்தமான செய்திகளை வரவேற்கிறார். சரித்திரம், சாஸனம், கைத்தொழில், விவசாயம், பிரயாணம்போன்ற விஷயங்கள் தேவை. சிறு கதைகளும், தற்காலப் பிரச்னைகளைப் பற்றிய கட்டுரைகளும் வரவேற்கப்படும்.

● பிரசுரமாகும் கட்டுரைகளுக்கும் புகைப் படங்களுக்கும் சம்மானம் அளிக்கப்படும். எல்லாக் கட்டுரைகளும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். காகிதத்தில் ஒரே பக்கத்தில், வரிக்கு வரி இடையே போதுமான (Double Space) இடம்விட்டு டைப் செய்து அனுப்ப வேண்டும். ஏற்றுக் கொள்ளாத கட்டுரைகளையும் புகைப்படங்களையும் திருப்பி யனுப்பவேண்டுமானல், தபால் தலை ஒட்டி விலாசம் எழுதிய கவர் வைக்கவேண்டும்.

● எல்லாக் கட்டுரைகளையும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்புக:

The Editor:

Travancore Information & Listener,

Department of Information,

Huzur Cutcherry, Trivandrum.

ராக ஆலாபனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

ஜீர்ணச்ருதி:—பஹுச்ருதி அண்ணா! என் பேரன் விச்சு பாட்டை நீங்கள் கேழ்க்கவில்லையே. நேற்றய தினம் நமது பஜனையில் ஜமாய்த்து விட்டான். எல்லாம் விருத்தச்ருதி அண்ணாவின் அனுக்கிரஹம். நாலைந்து வருஷமாக நன்றாய் உழைத்துச் சொல்லி வைத்திருக்கிறார். நூறு கீர்த்தனைக்கு மேல் தியாகையரவாளுடையது மட்டும் தெரியும். இதர உருப்படிகள் நூறுக்குக் குறையாமல் தெரியும். நல்ல ஸ்வர ஞானம். கொடுத்த இடத்திற்குத் தட்டுத் தடங்கல் இல்லாமல் ஸ்வரம் பாடுவான். ஸுச்ருதியிடம் விட்டிருந்தால்கூட இவ்வளவு சம்பிரதாயமான ஞானம் ஏற்பட்டிருக்காது. அவன் ரொம்ப பிகு செய்து கொண்டதின்பேரில்தான் விருத்தச்ருதியிடம் வேண்டிக்கொண்டேன். அவர் தியாகைய்யர்வாளுடைய நேர் சிஷ்யருடைய சிஷ்ய ரல்லவா? இப்பேர்ப்பட்ட குரு கிடைத்தது என் விச்சுவின் பாக்கியம். நீங்கள் கேட்டு அவனை ஆசீர்வதிக்க வேண்டும். நேற்று கானச்ருதி பிடிலுடனும், லகுச்ருதியின் கட வாத்யத்துடனும் பாடினான். எல்லாரும் மெய் மறந்து போய்விட்டார்கள். நல்ல கம்மல் பிருகா சாரீரம் அல்லவா! ஸபைக்கு ஜம் என்று களை கட்டவே இயற்கையில் தோன்றிய சாரீரம் என்று சொல்லலாம். முதலில் தோடி ராகத்தை ஒரு அலசல் அலசி விட்டுப் பின் "கொலுவமரகதா" பாடி சரணத்தில் "வெகு வஜாமுன்" என்ற இடத்தில் ஸ்வரம் பத்தாவர்த்தம் கச்சிதமாய்ப் பாடிவிட்டான். மல்லிகைப் பந்தலில் பன்னீர் மழை பெய்தது போல் ஸபை குளிர்ந்துவிட்டது. பின்பு ஒரே அமிர்தவர்ஷம் அவன் சாரீரத்தில் நினைத்தபடியெல்லாம் பேசுகிறது. இனிமையும் தனிப்பட்ட ஒரு பெருமையாக அதில் அமைந்திருக்கிறது. காத்ரம் போதாது என்பது வாஸ்தவம்தான். சிறு குழந்தையல்லவா? வயதானால் கனமும் கம்பீரமும் கொடுக்கும். மஹா வைத்யனதய்யர் பெயர் எடுப்பான் என்பது என் நம்பிக்கை. சர்வச்ருதியே ரொம்பக் கொண்டாடினார். அவரும் இதோ வருகிறார். அவரையும் வேண்டுமானால் கேளுங்கள்.

ஸர்வச்ருதி:—விச்சு பாட்டைப் பற்றியா? நன்றாய்ப் பாடுகிறான். ஆனால் ராகம் பாடுவதற்கு வயது போதாது.

பஹுச்ருதி - ராகம் பாடினாலல்லவா கச்சேரிக்கு வெளியில் கிளம்பலாம். உம் பேரன் பாடி முன் ஒரு தரம் கேட்டிருக்கிறேன். ஸ்வரங்களை நினைத்துக் கொண்டு ஜாக்கிரதையாய் ராகம் பாடுகிறான். ராக ஆலாபனை என்று சொல்லக் கூடிய அளவு ராகம் பாட இன்னும் ஞானமும் அனுபவமும் முற்ற வேண்டும். இரண்டும் முற்றினாலும் சிலருக்கே ராக ஆலாபனை நிஜஸ்வரூபத்துடன் அமைகிறது. சிவன்வாள் பக்குவத்திற்குக் கோடியில் ஒரு பாடகன் வரமுடியாது. ராகத்தில்தான் தைவீகக் கலப்பு விளங்கும். மற்ற அம்சங்கள் பயிர்ச்சியினால் பெரும்பான்மையோருக்கு வரக் கூடும். காம்போதி ராகம் என்பது ஸரி கம பத நிஸ. ஸநி தப மக ரிஸ என்ற லக்ஷணக் குறிப்புடனும் மகபதஸ, மகஸா, ஸநிபதஸா என்ற விசேஷ பிரயோகக் குறிப்புகளுடனும் கூடிய (தென்றாலும்) ராக ஸ்வரூபம் என்பது அகக் கண்ணுக்குப் புலப்படும் ஒரு ஆனந்த அனுபவம்.

அதில் ஈடுபட்டால் ராகம் ஸமுத்ரம் போல் பொங்கும். ஓயாத அலை வீச்சுக்களால் அனந்தமாயும், அப்ரமேயமாயும் தோன்றும் நிஜமான ராக ஆலாபனையைக் கேட்டவர்களுக்கு,

“அதிகம்பீர மனுவில மக்ஷோப்ய மத்ருஷ்ட பாரமவி லங்க்யம் அவிரள தரங்க ஸங்குல மைக்ஷிஷி விஞ்ஞான ஸாகரம் மஹாதாம்” என்ற நீல கண்ட தீக்ஷிதரின் கவியின் கருத்து அனுபவத்திற்கு வரும். அவர் ஆழங் காண முடியாததும், கலக்க முடியாததும், கரை காண முடியாததும், இடைவிடாமல் கொந்தளிப்புள்ளதுமான தன் பெரிய பாட்டனாரின் (ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரின்) ஞான ஸாகரத்தைக் கண்டேன் கண்டேன் என்று உள்ளம் பூரித்து உரக்கக் கூவினார். அதுபோல் திருமருகல் நடேசன் சிவன்வாள், சரப சாஸ்திரிகள், திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் இவர்களிடத்தில் ராக ஆலாபனைகளைக் கேட்டவர்கள் ஸமுத்ரம்போல் விஸ்தாரமும் கம்பிரமும் உள்ள ராக ஸ்வரூபத்தைக் கண்டேன் கண்டேன் என்று அடங்கா ஆனந்தத்துடன் உத்கோஷிப்பார்கள். ஸாஹித்யத்தில் அக்ஷர கால அளவுடைய “ச்லோகம்” சேர்ப்பதைவிட அளவு திட்டங்கள் விதிக்கப்படாத “கத்யம்” தொடுப்பதே கவியின் கலை முதிர்ச்சிக்கு உண்மையான உரைகல். (கத்யம் கவீனாம் நிகஷம் வதந்தி) என்று சொல்வதுபோல் ஸங்கீதத்தில், லயக் கட்டுள்ள கீர்த்தனைகள், ஸ்வர வரிசைகள் பாடுவதைக்காட்டிலும் பிரவாஹ ரூபமாயுள்ளர ாக ஆலாபனை செய்வதில்தான் உண்மையான முதிர்ச்சி வெளியாகிறது. கீர்த்தனைகளைச் சுத்தமான பரம்பரையில் அப்யஸித்து, நல்ல சாரீரத்துடனும், சிறிது அர்த்த ஞானத்துடனும் பாடினால் நிறக்கச் செய்துவிடலாம். ஸாதக பலத்தால் அவதானத்தை மேற்கொண்டு ஸ்வரங்களையும் வின்யாஸப்படுத்திப் பாடி விடலாம். ராகத்தை லக்ஷண ஞானத்தை மட்டும் வைத்துக்கொண்டு பாடிவிட முடியாது. பானகத்திற்கு ஏலப்பொடி கலப்பது போல் உணர்ச்சியைக் கலக்கவேண்டும். அவ்வுணர்ச்சி கலந்து பாடுகிறவன் புத்தி பூர்வகமாக வல்லாமலே லக்ஷணத்தை அனுஸரிப்பான். ஸ்வப்னத்தில், ஆகாயத்தில் பறப்பது சிலருக்கு அனுபவ ஸித்தம். விழிப்புடன் இருக்கும்போது பூமிக்கும் நமக்கும் ஸம்பந்தமில்லாமல் இரண்டொரு விநாடிகளுக்கு மேல் இருக்க முடியாது. (ஆகாயக் கப்பல் என்னும் கருவி பலத்தால் நாம் பறப்பதை இங்கு நினைத்துக் கொள்ளக்கூடாது.) ஸ்வப்பனத்தில் மண்ணை உதைத்துத் தள்ளிவிட்டு வானத்தில், ஹனுமான் ஸமுத்ர லங்கனம் செய்ததுபோல், ஸஞ்சரிக்கிறோம். உணர்ச்சியுடன் ராகம் பாடுவது இதுபோன்ற ஒரு அனுபவம். ஆனால் இதில் இன்னும் ஆச்சரியம் என்னவென்றால் கேழ்க்கும் ஸபையோர்களையும் ராக ஆலாபனம் செய்பவன் தூக்கிச் செல்கிறான். ராக ஆலாபனை முடிந்ததும் பாடுபவனும் அனுபவிப்பவர்களும் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவர்கள் போல் இந்த லக்ஷண ப்ரபஞ்சத்திற்கு வருகிறார்கள். இத்தகைய ராக ஆலாபனையோடு கூடியதே ஸங்கீதம்.

ஸர்வச்ருதி:—அண்ணா! நீங்கள் அனுபவிக்க விரும்பும் ராக ஆலாபனை அஸ்தமித்து இரண்டு தலைமுறை ஆகிறது. கலிகாலத்திற்கேற்ற ஸங்கீதம் செழித்து வருகிறது. புஷ்பவனமய்யர் யுகஸந்தியில் இருந்து பாடியவர். அவரிடம் ராக ஆலாபனை குறுகிவிட்டாலும் உணர்ச்சி அம்சம் பூர்ணமாய்ப் பொருந்தி யிருந்தது. அவருக்குப் பின் ராக ஸ்வரூபம் மூன்றாம் பிறைச்சந்திரன் போலாகிவிட்டது. ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர், ஸாஹித்யத்திற்கு நான்கு யுகங்கள் உண்டென்றார். வியங்க்யத்தில் முக்கிய நோக்கமுடையது கிருத யுக ஸாஹித்யமாம். திரேதா யுகத்தில் வியங்க்யம் தன் நிலமையிலில்லாமல் அணி வகைகளுக்குப் பணிந்து நிற்பதாம். துவாபரத்தில் அலங்காரங்கள் தனியே அமுல் நடத்தினவாம். கலியுகத்தில் ஸாஹித்யம் ஆடம்பரமான சொற்கள் களஞ்சியமாய் விளங்குவதாம். இவைகளிடையே சிலேடை, யமகம் முதலிய பூதங்கள் கூத்தாடுகின்றன. இவ்

வாறு, ராகமே கிருதயுக ஸங்கீதம். அது வியங்கியாம்சம் நிரம்பிய தல்லவா! சப்தங்களுக் கேட்டாத பெருமை வாய்ந்த பரபிரும்மம் "தீவமநந்த:" என்று பாடும் ஆலாபனைகளைக் கிரமத்தில் பிரதி பலிக்கிறது. லக்ஷணங்களுக்கு எட்டாத வஸ்து லக்ஷ்யத்தில் ஊஹிக்கப் படலா மல்லவா? அடுத்த யுகத்தில் ராகம் பல்லவியாகி தாள வரைக்குக் கட்டுப்பட்டுத் தன் உன்னதமான அலை வீச்சுகளையும் ஸ்வச்சந்தமான ஆரவாரங்களையும் பயன்படுத்தி வந்தது. துவாபரத்தில் பக்தி ரஸத்துடன் கூடிய கீர்த்தனை ரூபமாய் ஸங்கீதம் தங்கக் கூட்டில் அடைபட்ட கிளி போல் வளர்ந்து வந்தது. கலியில் பிரயாசையினால் ஸாதிக்கக்கூடிய அம்சங்களில் ஸங்கீதம் வலுத்து வருகிறது. ஸங்கீதத்தின் ஆத்மாவை உள்ளே நோக்குதல் என்பது அற்றுப்போய் ஸ்தூல சரீரத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதன் பயனைத்தான் கேட்போர்களுக்குப் புரிந்த பாஷையில் ஸங்கீதம் பாடவேண்டுமென்ற இயக்கம் பரவி வருகிறது. ஆடுசாப்பட்டி அம்மயப்பப் புலவர் பாஷையில் விளங்கும்படி சுருக்கச் சொல்லுங்கால் "ராமா உனக்கு ஸமானம் யார்" என்பதுதான். "ராம நீ ஸமான மெவரு" என்ற கீர்த்தனத்தின் டெஜன் கணக்கான உருட்டல் பெரட்டல்களுக்கு மத்தியில் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய ஸாராம்சம். இவ்வித நோக்கம் ஆமோதிக்கப்பட்டால் ஸங்கீதம் சப்தங்களின் கோலாஹலத்திற்கு உட்பட்டு ஜீவன் மரணதசையை அடைந்துவிடும். ஆனால் அவ்வளவு சீக்கிரம் கலி முற்றிவிடவில்லை. துவாபர யுக ஸங்கீதம் இப்போது சற்று உயிருக்குப் போராடி வருகிறது. திரேதாயுக ஸங்கீதம் மலையேறிவிட்டது. ஆனால் ஸர்வ ஆதாரமான ஆத்மாவை மறக்கமுடியாதல்லவா? ஆகையால் ராகம் சாகவில்லை. ஒருகாலும் சாகாது. ஆனால் ரூபம் மாறி லக்ஷணமென்ற ஸ்தூல காயத்தில் ஐக்யமாகி அறியமுடியாத அவஸ்தையில் ஜீவித்து வருகிறது. லக்ஷணத்தில் அதிகம் மாட்டிக்கொண்டால் தைவீக கிரணங்கள் உள் புகா. வியாகரண ஸூத்திரங்களை நினைத்துக்கொண்டு ஒருவனும் கவிதை செய்வதில்லை. மதச் சண்டைகளில் பிறந்த வாத கிரந்தங்களை ஆவர்த்தி செய்துகொண் டிருப்பவன் பிரும்ம ஞானியாகமாட்டான். லக்ஷண பண்டிதன் ஹ்ருதய விகாஸமுடையவனாகி விருப்பது அரிது. லக்ஷண ஞானம் பார வண்டி. அதை இழுத்துக்கொண்டு ஆகாயத்தில் பறக்கமுடியாது. லக்ஷ்யம் ஆகாயத்திலிருந்தும் நீண்டு மிளிரும் ஒரு ஒளி. அதில் ஸ்தூலாம்சம் நீங்கிய லக்ஷணம் ஸூக்ஷ்மாவஸ்தையில் கலந்துகொள்ளும். லக்ஷண வித்வானும் ராகம் பாடும்போது லக்ஷணத்தை மறந்து ராகத்தின் ஸ்ரூபத்தை அகக் கண்ணினால் பார்த்துக்கொண்டு சந்திராபீடன் தன் வழியை மறந்து கந்தர்வ மிதுனத்தை ஹிமவத்கிரியின் சிகரங்களில் துரத்திக்கொண்டு ஓடியதுபோல், மனம் போனபடி ஸஞ்சரித்து அச்சோத ஸரஸ்ஸைப்போன்ற ஆனந்த ஸரஸ்ஸை வந்தடையவேண்டும். இதன் தத்துவம் இப்படி இருப்பதால்தான் லக்ஷண ஞானமே கிஞ்சித்தேனுமில்லாத சில பாக்யசாலிகள் வாசாமகோசரமாக ராக ஆலாபனை செய்கிறார்கள். அத்தகைய யோக்யதை வாய்ந்த மஹாராஜபுரம் *ராமய்யாவைப் பலர் நன்கு அறிவார்கள். திருமருகல் நடேசனை ராமய்யாவின் ராக ஆலாபனைகளைக் கேட்டுக் கேட்டுக் களிப்புறுவது வழக்கமென்றால் அதிகம் சொல்வதேன்? அருள் பொருந்திய லக்ஷ்ய ஸங்கீதம் இப்போது க்ஷீணித்து வருகிறது. சாஸ்திர பாண்டித்யம் அதிகம் பரவி வருகிறது. வெகு பேர்கள் நன்றாய்ப் பாடுகிறார்கள். பேசவும் கற்றுக்கொண்டார்கள். ச்ருதி, லயம், ஸ்வரம், பாடாந்தரங்கள் ஒன்றிலும் குற்றம் குறை சொல்லமுடியாது. ஆனாலும் அவர்களின் ஸங்கீதம் படித்துறை கட்டிய அழகிய நகரத்துக் குளங்கள். மலைச்சாரல்களின் நீர் வீழ்ச்சிகளல்ல.

---

*மஹாராஜபுரம் விச்வனாதய்யரின் தகப்பனார்.

என்றும் வற்றாத ஊத்துக்கால்களல்ல. நறுமணம் வீசும் தாமரை ஸரஸ்ஸுக எல்லை. பெருமை வாய்ந்த புண்ய தீர்த் தங்களுமல்ல. பாய் வாய்க்கால், வடிவாய், மைய்ய மண்டபம், இவை அமைக்கப் பட்டு மின்சார விளக்குத் தூண்கள் சூழப் பிரகாசிக்கும் பாசி படர்ந்த கட்டுக் கடை ஜலங்கள். அவைகளுக்குச் செய் யப்படும் செலவுக்கும் அவைகளால் ஜனங் கள் அடையும் நன்மைக்கும் ஸம்பந்த மில்லை.

பஹுரூச்ருதி :—நீ சொல்வது சரி தான். மஹாவைத்தியனாதய்யர் 25 ரூபா வாங்கின கச்சேரிக்கு இப்போது 250 ரூபா வாங்குகிறான்.

ஜீர்ணச்ருதி :—இப்போது பணம் மலிந்த காலம்.

ஸர்வச்ருதி :—அல்ல. சிவன்வாளுக் குக் கொடுத்த ரூபா 25-ம் காணிக்கை யாகக் கொடுக்கப்பட்டது. இப்போது வாங்கும் ரூபா 250-ம் கூலியாகக் கொடுக்கப்படுகிறது. பணம் பெருக்கவும் மரியாதை போய்விட்டது. பாடச்சொன் னதைப் பாடவேண்டும். "காண்ட் ராக்டு" தஸ்தவேஜிபோல் "ப்ரோ க்ராம்" எழுதி முன்னதாகவே கொடுக்க வேண்டும். முடிக்கும் ஸமயத்தில் சீட்டுக் கள் வரும். நடுவில் யாராவது ஏதாவது கேட்பார்கள். ஸந்தோஷம் வந்தால் கைகொட்டுவார்கள். எழுந்திருந்து போகும்போது "இன்று ஏமாற்றிவிட் டான் பணத்தை வாங்கிக்கொண்டு" என்று தூஷிப்பார்கள். பாடும்போது கும்பல் கும்பலாய்ப் பேசிக்கொண் டிருப்பார்கள். நடுவில் யாராவது ஒரு ஜரிகைத் தலைப்பா அல்லது சிகப்புச் சால்வை உபந்யாஸத்திற்கு ஆரம்பித்து விடுவான். மணத்தை இழந்து பணத்தை வாங்கிக்கொண்டு போகிறான் பாடகன். அந்தக்காலத்தில் என்ன கௌரவம், என்ன பெருமை, என்ன பக்தி விச்வா ஸம்! இன்று எல்லாம் லீலையே ஒழிய ஸங்கீதக் கச்சேரியல்ல. நாடக மேடைக் கும் கச்சேரி மேடைக்கும் நிரந்தரமான நட்பு ஏற்பட்டு வருகிறது.

ஜீர்ணச்ருதி :—காலப்போக்கு இவ் விதமிருப்பது வாஸ்தவம், ஸங்கீத வித் வான்கள்தான் என்ன செய்வார்கள் பாவம்! இருந்தாலும் இந்த நிலைமையி லும் சீர்திருத்தங்கள் செய்துகொண்டு உயர்ந்த நோக்கங்களைக் கொஞ்சம் அனு சரிக்கலாமல்லவா!

ஸர்வச்ருதி :—சிரமப்படும். ஏனெ னில் அவ்வித நோக்கங்களுக்குத் தேவை யிருந்தாலல்லவா அவைகளில் வித்வான் களுக்குச் சிரத்தை ஏற்படப் போகிறது. முன் காலத்தில், அரசாங்கம், பிரபுக் கள், வித்வான்கள் இவர்கள் அத்யக்ஷர் களாகவிருந்து நடத்திய ஸங்கீதம் இப் போது ரயில் வண்டிப் பிரயாணம்போல் டிக்கட்டு வியாபாரத்தினால் நடப்பதால் பாமர ஜனங்கள் வசம் சிக்கிக்கொண்டு விட்டது. கொடுத்த அணாவுக்கு ஸங்கீ தத்தை நிறைதூக்கிப் பார்க்கிறார்கள். எட்டணாச் செலுத்தியவனும், "எம்டி" யான ஜரிகைத் தலைப்பாவும்தான் ஸங்கீத "பேட்ரன்" என்று நினைத்துக்கொண்டு விடுகிறான். ஸங்கீத வித்வான்களும் வெகுவாக ரஸிகர்களையும் மஹானுபாவர் களையும் மறந்து பணப்பைகளை மோப்பம் பிடித்துக்கொண்டு ஓட வாரம்பிக்கிறார் கள்.

பஹுரூச்ருதி :—இந்தக் காலத்திலும் இரண்டுமறியாத பாமர ஜனங்களின் அபிருசிகளை ஸங்கீதக்காரர்கள் கொஞ் சம் சிரத்தை எடுத்துக்கொண்டால் மாற்றிவிடலாம். ஒரு ஆஹாரத்தைப் போட்டு ஒரு ஜீவனைப் பழக்குவதுபோல் ஜனங்களையும் ஸங்கீதம் கேழ்க்கும் வழி யில் பழக்கிவிடலாம். அதற்குப் பிரபல பாடகர்கள் சிலர் மனம் ஒத்துத் திட்டங் களை ஏற்படுத்திக்கொண்டு வழிகாண் பிக்க முன்வர வேண்டும்.

மெய் மறந்த சமாதி

[டி. எஸ். ராமாநுஜம், எம். ஏ., பி. எல். (லண்டன்)

சமாதி யென்றால் என்ன?

சமாதியென்பது மாபெரும் தத்துவம். மோட்சத்திற்கு உகந்த சமத்துவம். இதை யறியாமல், பொருள் வேறாய் எண்ணி, பலர் தவிக்கிறார்கள். சாதாரணப் பேச்சில், ஒருவன் சமாதி யடைந்துவிட்டானென்றால், அவன் இறந்துவிட்டான் என்றும், அவன் சமாதி யென்றால், அவனது சவம்புதைக்கப்பட்ட இடம் என்றும், சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஞான நூல்களெல்லாம் தேடி நிற்கும், மோட்சமென்ற உயர் பதத்தைக் குறிக்கும் இச்சொல்லுக்கு, இவ்வளவு இழிவான அர்த்தத்தைக் கொடுப்பதென்றால், உலகத்தில் அஞ்ஞானம் இன்னமும் எவ்வளவு பரவி நிற்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சீர்கெட்ட மனித சமுதாயம் விரைவில் முன்னேற வேண்டுமென்றால், வேதவேதாந்தச் சொற்களின் பொருள்களை, ஏட்டுச்சுரைக்காயாக வைத்திராமல், கால தேச வர்த்தமானத்தை யொட்டி அநுபவ வாயிலாக, உள்ளபடி உணருதற்கு இனி தாமதிப்பது மதியீனமன்றோ!

"சமாதி"யின் உட்கருத்தென்ன? அச்சொல்லையே கேட்டுப் பார்ப்போம். "சம-ஆதி" என்று அது நமக்கு விளக்கிக் காட்டுவது போலும். ஜெகத் சிருஷ்டிக் கர்த்தாவான ஆதியுடன் (ஆதி என்றால் ஆரம்பமன்றோ!) சரிசமானமாய் நிற்பதே "சமாதி"யாகும். "தன்னைத்தானே படைத்தல்" என்ற சக்தி ஆதியிடமுண்டு. அதை அறிந்து, அடையும் வரையில் நாம், பிரம்மத் துல்லியம் அல்லது "சமாதி" என்ற மோட்சபதத்தை யடையமுடியாது. இவ்வுண்மையை மறந்து சமாதியைப் பல வகைப்படுத்தி, ஈசுவர துரியம் (சுவாநுபவத்தில் உள்முகமாய் விளங்குதல்), ஜீவதுரியம் (சுவாநுபவத்தில் வெளிமுகமாய் விளங்குதல்), பிரம்மதுரியம் (சுவாநுபவத்தில் மத்தியில் விளங்குதல்), என்றெல்லாம் நாமகரணம் செய்து, "சுகதுக்கப்படுவது, தானல்ல என்று அறிந்து, தனித்திருப்பதே சமாதி; அச்சமாதி வளரவே, நம்மை மறைத்த இருள், ஆவரணம், நம்மை சரீரமாகத் தோற்றினது விட்சேபம், என்று அறியவரும்; அப்பொழுது தானாகியதே, நினைப்பு என்று அறிந்தால் ஸ்தூலமில்லை, அறிவென்றறிந்தால் நினைப்பில்லை, ஆனந்தமென்றறிந்தால் அறிவில்லை; இவ்வித ஆனந்தமயகோச வியாபக விளக்கமே துரிய சொரூபம், இவ்விதம் சிந்திப்பதே ஸ்தூலமென்ற பாகம் நீங்குமிடம்" என்றெல்லாம் பெரும் பேச்சுகள் பேசுகிறோம். மேலும், சமாதியின் அந்தம், நித்திய சமாதியாம். அங்கிலே குணாதீதமாம், காலாதீதமுமாம்! ஒரு பரவஸ்துவே ஞானசூரியன், சிதாகாசன் என்ற கருத்தை யறியாமையால், பிறப்பு - இறப்பு என்ற துக்கம் உண்டாகிறதாம். அத்துக்கத்தை நீக்கவல்லது நித்திய சமாதியாம். அங்கிலையிலுள்ளோன், அந்நியமின்றி, தானேதானா யிருந்துள்ள நிரதிசயானந்தத்தை யடைந்து, ஞான சொரூபமாகிய அருட்பிரகாச சொரூபமாய் விளங்குவானாம். நாம் சுபாநுபூதர்களாயிருந்தால் இன்னும் பெரும் பேச்சுக்கள் பேசக்கூடும். உதாரணமாக, பரமன் எல்லா ஜீவர்களின் இருதயக் கமலத்தில் வீற்றிருக்கிறான்; அங்கு சத்து, சித்து, ஆனந்த சொரூபமாகிய தெதுவோ, அதுவே, தானென்றும், ஈதென்றும், அறிவது எதுவோ, அதுவே தனித்த ஆத்மா, தனித்த சிவன்; இப்படித்தானாயிருப்பது தவம், தனித்திருப்பது சமாதி; சமாதியின்

இலட்சியமாயிருக்கிற ஆதியை ஏகாந்த சொரூபன், எங்குமுள்ளவன், நித்தியன், அகண்ட பரிபூரணன், சச்சிதானந்த சொரூபன், மேல் கீழ் என்று சொல்வ தற்கிடமின்றி நிற்பவன், என்றெல்லாம் வர்ணிக்கலாம்.

இதுவரையில் சமாதியின் லக்ஷணத் தைப்பற்றிச் சொல்லியிருப்பதின் சாராம் சம், எக்காலத்தும் அழியாது, சித்து நானென்று மகிழ்ந்து, நடுநிலே வழுவா மல் நின்று, பிரம்மதரிசனம் செய்து, சும்மாயிருத்தலேயாம். கீழ்க் கண்ட செய்யுள்கள் இதை விளக்கும்.

"கற்பனையற்று கனல்வழியே சென்று
சிற்பனை யெல்லாஞ் சிருட்டித்த போரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்று
தற்பரமாகத் தருந்தண் சமாதியே"

"காரியமான வுபாதியைத் தான்சடந்
தூரிய காரணமே ழுந்தன் பாலுந்
வாரிய காரணமாய்த் தவத்திடைத்
தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே"

"சும்மா யிருத்தலே சுகம்"

"சமாதி செய்வார்க்குத் தரும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டா மிறையுட னேகிற்
சமாதி தானில்லேத் தானவ னாகிற்
சமாதியி லெட்டெட்டுச் சித்தியு மெய்துமே"

"தானே தானாய், தன்னிற் றன்னே
தானே கண்டு தன்னல முற்று
வசையில் தத்துவ மசிபதத் தெளிவால்,
அகமே பிரம மாயினன்"

மெய்ச் சமாதி

மனத்தின் பிரக்ஞா நிலேயை நால் விதமாகச் சொல்லுகிறார்கள். ஜாக்கிர தம், சுவப்பனம், ஸுஷுப்தி, துரியம். ஜாக்கிரதை அல்லது ஸ்தூலப்பிரக்ஞை, அன்னமயகோசத்தின் (Physical) வேலேயை மூளேயில் பதிக்கிறது. சுவப் பனம் அல்லது சூட்சுமப் பிரக்ஞை பிராணமயகோசத்தின் (Astral) வேலே யை உணர்த்துகிறது. ஸுஷுப்தி அல் லது மனப்பிரக்ஞை மனோன்மயகோசத் தின் (Mental) வேலேயை உணர்த்து கிறது. இம்மூன்றையும் தாண்டி நிற் கும் துரியம் அல்லது புத்திப்பிரக்ஞை ஆனந்தமயகோசத்தின் (Buddhic) வேலேயை யுணர்த்துகிறது. இந்த நான்கு பிரக்ஞைகளில் ஏதாவதொன்று இருக்கும்போது,மற்ற மூன்று பிரக்ஞை களிருக்க முடியாது. ஆதலால், ஒரு கோசத்தின் பிரக்ஞைபங்கமாகித்தான், மற்றோர் கோசத்தில் பிரக்ஞையேற்பட வேண்டு மென்றால், இதுவரையிலும் அனுட்டிக்கப்பட்ட சமாதி விதிகளால் உண்மையான சமாதியடைய முடியுமா? சமாதியே யோகமென்று சொல்லும் யோக சூத்திரங்களேயே கவனித்தாலும், எக்கோசத்திலும், எக்காலத்திலும், யாதொரு பிரக்ஞாபங்கமும் ஏற்படாத வோர் மார்க்கம் தெரிவிக்கப்படவில்லே யென்று தீர்மானிக்கலாம். மெய்மறந்த சமாதி யென்றால், ஏதாகிலும் ஒரு கோசத்தை ஸ்தூலம் அல்லது மெய் என்று வைத்துக்கொண்டு, அதன் பிரக்ஞையை முற்றிலுமிழந்து, அதற் கும் நுட்பமாயிருக்கிற அடுத்த கோசத் தைச் சூட்சமமாகக் கருதி, அச்சூட்ச மத்தில் மனதைத் திரியவிட்டுச் சமாதி நிலேயிலிருத்தலேயாகும். இவ்விதம், மனிதனுடலாகிய ஜீவ-ஜட அமைப் பில், ஸ்தூலம், சூட்சுமம், மனம், புத்தி, நிர்வாணம், பரநிர்வாணம், மஹா பர நிர்வாணம் என்ற ஏழு கோசங்கள் ஒன்றைவிட ஒன்று அதிக நுட்பமாய் முறையே வாய்ந்திருப்பதால், சூட்சம கோசத்தில் சமாதி சித்திக்கும்போது, ஸ்தூலகோசத்தை மறந்தும், மனோன் மயகோச சமாதி சித்திக்கும்போது, ஸ்தூல சூட்சமகோசங்களே மறந்தும்; இவ்விதமே, முறையே சென்று,முடிவில் மஹா பரநிர்வாணம் சித்திக்கும்போது, எஞ்சிய ஆறுகோசங்களிலும் பிரக்ஞை யை யிழப்பதே, மெய்ம்மறந்த சமாதியின் பரிபூரண சித்தி!

மெய் என்ற பதத்திற்குத் தமிழில் உண்மை என்றும், ஸ்தூலம் என்றும் இரு பொருள் உள. சமாதியின் லக்ஷ ணம் "மெய்" மறப்பதென்றால், அதில் ஏதோ தவறிருப்பதென்று தொனிக்கிற தல்லவா? பிரக்ஞா பங்கமில்லாமல் ஒரு

கோசத்தில் நின்றே மனித உடலில் அமைக்கப்பெற்ற மற்ற கோசங்களை யெல்லா மறிதல் மெய்யான சமாதி யாகும். ஸ்தூலமென்ற "மெய்யை" மறந்து அடையும் சமாதி உண்மை யென்ற மெய்யையும் மறந்திருப்பது போல்தோன்றுகிறது. ஸ்தூலப்பிரக்ஞை இழக்காமல், சுவப்பனம், ஸுஷுப்தி, துரியம் என்ற மூன்று மனோநிலைகளின் வியாபகங்களை உணர்தலே மெய்ச்சமாதி யென்றும், மற்றெல்லாம் பொய்ச்சமாதி யென்றும் அதிதிடமாய்ச் சொல்லலாம். இதுவே தாயுமானவர் சொன்ன "தூங் காமல் தூங்குதல்" என்ற சுகாநு பவத்தின் உட்கருத்து. தூங்குதல் என் றால் பிரேதாசனம் போடுதல், நீட்டிப் படுத்தல். அவ்விதம் படுத்து, கண்களை மூடிக்கொண்டு, தூக்கத்தைத் தடுத்து, தூ (பரிசுத்தமான) ஊக்கத்தைக் கையாண்டு, உடலுக்குள் நடக்கும் சகல சூட்சும கதிகளையும் ஆராய்ந்து அறிந்து, ஸ்தூலப் பிரக்ஞைக்குக் கொண்டுவரு வதே "தூங்காமல் தூங்குவதாகும்." இச்சமாதி சித்திக்குமானால், ஸ்தூலத் திலேயே கைவல்ய நிலையை யடைந்து, ஊண், உறக்கமின்றி, பிணி, மூப்பின்றி, சாக்காடு இல்லாமல் பூலோக அமரராய் வாழமுடியும். இவ்வரிய பதத்தை யடைய முடியுமா? என்று ஏங்கி நிற் போர், அடையக்கூடிய சமாதி வேறு. அதையும் ஸ்தூலசமாதி யென்றே சொல்லுகிறார்கள். அதை, உடலிலுள்ள பஞ்சபூதங்களை யொட்டிப் பிரிக்கலாம். பிரிதிவி சமாதி யென்றால், இறந்த மெய்யை (உடலை) மண்ணுக்கு இரை யாக்கி, மக்கச்செய்வது. அப்பு சமாதி யென்றால், இறந்த மெய்யை கங்கையில், மீன், சுறா முதலிய நீர்வாழ்வினத்திற்கு இரையாகக் கொடுப்பது. தேயு சமாதி யென்றால், கட்டையும், விரட்டியு மிட்டு இறந்த மெய்யைச் சாம்பலாக்கு வது. இவ்விதம் மெய் நசிப்பதுடன், சூட்சும பாகங்களும் நசிக்கும் மார்க்கங் களை, வாயு, ஆகாச சமாதிகளென்று, சவக்குழியில் விழுவதற்கு ஏற்பட்ட பாஷை பேசுகிறது.

ஜகத்குரு இலட்சணம்

நமது பெரியோர்கள் குருவில்லா ஞானத்தை, சூளையில் சுடா மட்பாண் டத்தை நீரில் வைத்த தொக்குமென் கிறார்கள். மனித ஸ்தூலம் ஞானக்கினி யால் சுடாத மட்பாண்டமாம். சூட்ச மமோ, அவ் அக்கினியால் சுட்ட தேக மாம். ஆதலால், ஸ்தூலத்தை மறப்பதே சமாதியின் ஆரம்பப்படியாம். இக்கருத்து "சம—ஆதி" என்று சொல்லப்படும் சமாதிக்கு, ஒவ்வாதது என்று மேலே விளக்கிக் காட்டி விட்டோம். 'ஆதி'க் குச் சமமாகும் மெய் ஞானத்தைக் கற் பிக்க வல்ல குரு எத்தகுதி யடைந்து இருக்க வேண்டும்? பிரம்மத்தை யறியா மலும், தரிசிக்காமலும் அதற்குச் சம மாக முடியாது. பிரம்மத்தைக் காட்டிக் கொடுக்கிறேன் என்று ஒரு குரு சொல்வ தாக வைத்துக்கொள்வோம். எதற்கும் மேலானது பிரம்மமென்றால், அதற்கு மேலானதாய் அக்குருவிருக்க முடியாது. அதற்குக் கீழ் நிலையில் அக்குரு இருந் தால், அவர் சொன்னபடி, சர்வ சுதந்திர முள்ள பிரம்மம், நடக்குமென்ற நிச்சய மில்லை. ஆதலால், அக்குருவின் வார்த் தையை நாம் நம்பவேண்டுமானால், அப் பிரம்மமே அக்குருவா யிருக்கவேண்டும். பிரம்மமே குருவா யவதரித்து, தன்னை உணரவல்ல உபதேசத்தை நமக்குக் கொடுத்து, நம்மை நாமே நமஸ்கரிக்கும் படி செய்து "சம—ஆதி" நிலையைக் கைகூட்டிவைக்க வேண்டும். அப் பொழுது, அதற்கு ஜெகத்குரு என்ற பட்டத்தைக் கூசாமல் கொடுக்கலாம்.

சத்குரு இலட்சணத்தை திருமூலர் திருமந்திரத்தில் பின் வருமாறு விளக்கு கிறார் :—

"பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்
குருபரி சித்த குவலய மெல்லாந்
திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே"

பரிசவேதி என்ற கல் எதைத் தொட் டாலும் அது தங்கமாகும். அதுபோல் சத்குருவின் அருள் பெற்ற யாரும் தூய்மை யடைவார். ஆனால், பரிசவேதி

தொட்டுத் தங்கமான ஒரு வஸ்து, மற்ெறான்றைத் தொட்டால், அது தங்கமாகாதல்லவா? மறுபடியும் பரிசவேதிக் கல்லைக் கொண்டுதான், இரண்டாவது பொருளையும் தங்கமாக்க வேண்டும். பரிசவேதி ஒன்றைத் தொட்ட போதிலும், தங்கமாக்க வல்லதன் மயத்தை யிழக்காது. தன்னைப் பாதுகாத்து நிற்பதே, அதனியல்பாகும். அத்துடன் சமத்துவமடைய வேண்டுமென்று ஒரு பொருள் முயல்வது வீணே. ஆனால், குரு கடாக்ஷத்தால் தூய்மை யடைந்த சீடன், மற்றொருவனைத் தேற்றினால், அவனும் சிவமயமாவான். இதுவே, தங்கமாக்கும் பரிசவேதிக்கும், சிவ மயமாக்கும் ஜெகத் குருவிற்குமுள்ள பெரும் வித்தியாசம். ஆதலால், இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பேசல் அவ்வளவு நேர்த்தியல்ல. குளவி கொட்டிக் கொட்டி ஒரு புழுவைத் தன் மயமாக்குவதுபோல், ஒரு குரு, தன் சீடனைத் தேற்றி சிவமயமாக்க வேண்டுமென்றால், அக்குரு ஆதியாகத்தான் இருக்க வேண்டும். ஆதலால், பிரம்மோபதேசத்தை, பிரம்மமேயாவது அல்லது பிரம்ம துல்யம் பெற்று சம-ஆதி நிலையில் நிற்கும் ஜீவமுக்தனாவது செய்ய வேண்டுமே ஒழிய, வேறு எவராலும் முடியா. இவ்விதம் சீடர்களுக்குப் பிரம்மோபதேசம் செய்தல், அவ்வுபதேசத்தால் தேறிய சீடர்கள் மற்றவர்களுக்கும் அவ்வுபதேசத்தைச் செய்தல், இதனால் ஜீவராசிக ளனைத்தும் பிரம்ம துல்யமடைதல், என்றால், பிரம்மமே மனித உடல் எடுத்துக் குருவாகி நிற்க வேண்டும். அக்குருவின் உபதேசம், எல்லா வுயிரும் ஒன்றே என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். பிரக்ஞாபங்கம் எக்கோசத்திலும் வராமல், அவ்வுபதேசம் சுபாநுபவமாகப் பரிமளிக்க வேண்டும். அழியும் கோசங்கள் அழியாத் தன்மை பெற்று மனிதன் ஆதிக்குச் சமமாக வேண்டும். ஸ்தூலப் பிரக்ஞையைக் கெடுக்கவல்ல ஜெபதபங்கள், ஆசனாதிகள், மந்திரங்கள், ஹிப்னாட்டிஸம், (Hypnotism) மெஸ்மெரிஸம் (Mesmerism) பிறரெண்ணமறிதல் (Thought Reading, clairvoyance) முதலிய தந்திரங்கள், சித்து வேலைகள், இவற்றை யெல்லாம் அவ்வுபதேசம் கண்டிப்பதா யிருக்க வேண்டும்; அவ்வுபதேசத்தை அப்பியசிக்கும் சீடர்கள் ஜீவகாருண்யம் மிகுந்து, புலாலுண்ணல், மிருக பலியிடுதல் முதலிய செயல்களை அறவே விட்டிருக்க வேண்டும் என்றெல்லாம் தோன்றுகிறது. இத்தகைய போதகம், பாமர ஜனங்களுக்கு எளிதில் கிடைப்ப தெவ்வாறு? கிடைக்குமா?

எல்லோரும் ஜென்மமெடுத்தது முதல் ஜீவதசை முடியும் வரையில் இன்னது செய்யவேண்டுமென்பதைப் பெரியோர்கள் மூலமா யறிகிறோம். சாஸ்திர ஞானத்தை அறிந்து கொடுக்கப்பட்ட முறைகளை நாம் அநுசரிக்கிறோம். அவைகளில் வர்ணாசிரம தர்மத்திற்குத் (அதாவது ஜாதிக்கு) தகுந்தபடி ஆசார நடவடிக்கைகளையும், நம்மை யுண்டாக்கிய ஆதியினிடம் நாம் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதும் முறைப்படி விதிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்கி, நாம் வாழ்நாளைப் பயபக்தியுடன் கழித்து வருகிறோம். ஆனால், நமது நடத்தை ஒருவிதத்தில் குறைபட்டுள்ளதே. பிறர் பேச்சைக் கேட்டுச் சுயவாராய்ச்சித்துளியேனுமின்றிக் குலாசாரத்தை நாம் அநுட்டிப்பது, புருஷன் பேச்சைக்கேட்டு பணியும் பெண் புத்தியை யொக்கும். இவ்விதம் வாழ்வதில் ஞானமார்க்கம் மேலிட யாதொரு முயற்சிக்கு மிடமில்லாமல், கிருஹகிருத்தியங்கள் பல செம்மையாய் நடந்தேறி வருகின்றன. நம் குழந்தையை யாதரிக்கிறோம், குடும்ப வேலையில் ஈடுபடுகிறோம், நமக்கு மூப்பு வந்த காலத்தில் ஜென்மா எடுத்த வேலையாகிவிட்டது, இனிமேல் நல்ல கதியுண்டாகவேண்டும், அடுத்த ஜென்மம் நல்லதாய்க் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு நாட்களைக்கழிக்கிறோம். இந்த சிருஷ்டி என்ன காரணத்தாலுண்டாயிற்று, நமக்கு இந்த 'மனு'ப்படி ஏன் ஜென்மாக்கொடுபட்டது, இப்படி எத்தனை ஜென்மாவிற்கும்

போகவேண்டும், கடைசியில் இதற்கு முடிவென்ன, நமக்கு உண்டான மக்கள் ஏன் நம்மால் வெளிப்பட்டார்கள், என்ற விவரங்களை யறியாமலே நாம் எவ்வளவு காலம் வாழ்ந்திருப்பது? குடும்ப வாழ்க்கையை வெறுத்து, காஷாயம் தரித்தோ, காட்டுக்கு ஓடியோ, மேல்கண்ட கேள்விகளுக்குத் தக்க விடை கண்டுபிடிக்கவு மியலாது. இல்லறமென்ற நல்லறத்தையே தருமப்படி நடத்துவது குறைவாகாது. ஆனால் அவ்விதம் நடத்துங்கால், பிரம்மத்தை கண்டுபிடிப்பதற் கல்லவோ, அவ்வறம் ஏற்பட்டது, அதனால்தானே அதைச் சிலாகித்துச் சொல்லுகிறார்கள், அவ்வறத்தால் நாம் பிரம்மத்தைக் கண்டுபிடிப்பதெவ்வாறு, மூடத்தன்மையாய், காமசாந்திக்காகவே அதையுபயோகிக்கிறோமே, சிற்றின்பத்தை ஞானபாகமாக்கிப் பேரின்பமடையும் வழிதெரியவில்லையே,என்ற கவலை நமக்கு வந்து நாளுக்குநாள் அதிகரிக்கவேண்டும். ஆனால் பிரம்ம விசாரத்திற்குப் போதுமான காலம் துன்பமிகுந்த இல்லறத்திலில்லையே, வாணாள் வீணாகிறதே என்ற கவலைமட்டு மிருந்தால், முடிவு கிடைத்துவிடுமா? அதற்கு வேண்டிய பிரயத்தினம்செய்யவேண்டுமல்லவா? அம்முயற்சிக்கு வேண்டிய சாவகாசத்தை நாம் எப்படியாவது உண்டாக்கிக் கொள்ளவேண்டுமல்லவா? பொதுவாக ஞானமுண்டாகவும், நம் வாழ்நாளைச் சிரமமில்லாமல் கழிக்கவும் பெரியோர்கள், பக்தியுடன் ஈசுவரனை ஆராதிக்கவும், மோட்சத்தில் மனது நாடவும் அனுட்டிக்கவேண்டிய வழிகளைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் அவைகளை (பட்டினியிருத்தல், ஆசனம்போடுதல், சுவாசபந்தனம் செய்தல், மௌனம் சாதித்தல் முதலியவைகளை) அனுட்டிப்பது சாதாரண ஜனங்களுக்கு வெகு சிரமம். மேலும், இப்பிறப்பிலேயே அவ்வழிகளைத் தழுவி நடப்பதால் மறுப்பிறப்பில்லாது செய்துகொள்ளும் நிச்சயம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எவ்வளவு ஏழையாயிருந்தாலும், மூடனாயிருந்தாலும், ஒருவன் இவ்வுலகில் சர்வஞானத்தையுமறியும் வண்ணமும், சிருஷ்டி ரகசியங்களைக் கற்பித்து, சிருஷ்டிக் காரணம் இனத்தை இன்னதென்று தெரிவித்தும், அவனை சற்பாத்திரனுக்கும் வழி ஏதேனுமுண்டோ? அவன் மூப்பு-மரணமற்று, ஏழ்மை, கஷ்டம் விசனம் முதலிய எவ்விதக் குறைகளுமின்றி இருக்கமுடியுமா, இருப்பதெவ்வாறு? இக்கேள்விகளைக் கேட்பதெளிது; அவைகளுக்குத் தக்க விடை யளித்து ஜீவராசிகளனைத்திற்கும் தற்கால நிலைமையில் சுலபமாய்ச் செய்யக்கூடிய மெய்ச் சமாதி யோகத்தைக் காட்டுதல் அருமை.

யோகத்தின் அவசியம்

நாம் யார்? ஏன் இவ்விடம் வந்தோம்? எங்கே போகப்போகிறோம்? இக்கேள்விகளை யுணர யோகசாதகம் முக்கியமென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே.இதற்குக் குண்டலினி என்ற சக்தியால்தான், பிரயத்தனிக்க வேண்டுமென்பது யோகிகளால் தெரியவருகிறது. இதன் ரீதியில் சில அப்பியாசங்களேற்பட்டு, அவைகளில் ராஜயோகமென்பது மிகவும் மேன்மையானதென்னும் உண்மை பதஞ்சலி ரிஷியவர்களால் வெளிவந்தது. இதை அஷ்டாங்க யோகமென்றும் கூறுவதுண்டு. சாதாரணமாக வாயு சமாதியென்று மேலே கூறிய சூட்சும சமாதியை அஷ்டாங்க யோகமென்பார் பலர். இது உஸ்வாச-நிஸ்வாச பிராண வாயுவினையும் (அதாவது இடகலை பிங்கலையின் கிரமத்தையும்) இரேசக, பூரக கும்பக விளக்கத்தையும் சற்குரு முன்னிலையில் செவ்வனே கேட்டுத் தெளிந்து, சின்மய[illegible]டி நிற்பதாம். இதை சிவராஜ யோகமென்றும் அழைக்கலாம். இவ் யோகசித்தி யடைந்தோர்களைத் தீயால் எரித்தல்கூடாது என்று திருவருட்பா சொல்லுகிறது:—

“பிறந்தவரை நீராட்டிப் பெருக
வளர்த்திடுகின்றீர் பேயரே நீர்
இறந்தவரைச் சுடுகின்றீ ரெவ்வணஞ்
சம்மதித்தீரோ விரவிற் றூங்கி

மறைந்தவரைத் தீமூட்ட வல்லீரால்
நும் மனத்தை வயிரமான
சிறந்தவரை யெனப்புகழச் செய்துகொண்டீ
பிறந்து திரிகின்றீரே." [ரேன்

"புலைத்தொழிலே புரிகின்றீர் புண்ணியத்தை
கருங்கடலிற் போகவிட்டீர் [ச்
கொலைத்தொழிலில் கொடியீர்நீர் செத்தாரை
சுடுகின்ற கொடுமை நோக்கிக்
கலைத்தொழிலிற் பெரியருளங் கலங்கினரக்
கலக்கமெல்லாம் கடவுணீக்கித்
தலைத்தொழில்செய் சன்மார்க்கந் தலையெடுக்
புரிகுவதித் தருணந்தானே" [கப்

ஆனால் அஷ்டாங்க யோகத்தைச் செய்து சமாதி நிலையையடைய பிராணுயாம விதிகளால் கும்பகம் என்கிற நிஸ்வாசம் செய்யாத காலத்தில் குண்டலினி சக்தி சரீரத்தில் வேலைசெய்யப் பிரயத்தனித்தால், வெளி வியாபாரப் பிரக்ஞையற்றுப்போகும். இத்தகைய பிரக்ஞாபங்கம் ஸ்தூலகோசத்தி லேற்படுவதால் அது ஆதிக்குச் சமமான பதத்தை யெப்படித் தரமுடியும்? அதை எப்படி மெய்ச் சமாதி என்று சொல்லமுடியும்? மேலும் அஷ்டாங்க யோகம் செய்து சம - ஆதி நிலையடைவது மிகவும் பிரயாசை. அப்படி நேர்ந்துவிட்டால் குண்டலினி படிப்படியாய்க் கைவல்ய ஸ்திதியடையச் செய்யுமென்பது சித்தாந்தம். இவ்விதம் செய்வதின் தாத்பரிய மென்ன? இந்த சடசரீரம் எதற்கும் உபயோக மற்றது, அழிவுள்ளது, என்ற தீர்மானத்தால் நமக்குள்ளிருக்கும் சூட்சும சரீரத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டு மனதால் கொடுக்கப்படும் பூர்வ வாசனைகளை நாசம் செய்துகொண்டு, கைவல்ய மடைய வேண்டுமென்று பெரியோர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதனால், நாம் ஈசுவரன் இவ்விதம் இருப்பார் என்று அறிய முடியாமல் போகுமல்லவா? இவ்யோகக் கட்சியாளர் தெரிவிக்கும் சிருட்டிக் கிரமத்திற்குச் "சாங்கிய" பதமென்ற பெயருண்டு. வேதாந்திகளென்ற மற்றொரு கட்சி ஜாக்கிரதா அவஸ்தையென்ற பாவத்துடன் வேறுவிதமாய்ச் சிருட்டிக் கிரமத்தை யெடுத்துரைக்கிறார்கள். இன்னும் சிலர், ரூபமுள்ள ஈசுவரன் பிரம்மாவாகி இந்த அண்டங்களைச் சிருட்டிப்பதாய்க் கூறுகிறார்கள். மற்றும் பல கட்சிகளுமுள. இவ்விதம் அநேக ரீதியில் சொல்லுவதை நாம் ஆலோசிப்போமாகில் எதை நம்பி நடப்பதென்ற சந்தேகம் உண்டாகுமல்லவா? எல்லாவற்றிற்கும் காரணம் ஒன்றாகத்தானே யிருக்கவேண்டும்? அதையறிய ஒரு வழி தானே யேற்படவேண்டும்? அங்ஙனமிருக்கப் பல பல மதஸ்தர்கள், பல மதங்களை யுண்டாக்குவானேன்? இம்முரண்பாடுகளும் ஈசுவர நியமனமாகுமோ? இவ்வளவுசந்தேகங்களுண்டாகும் இந்தப் பரத கண்டத்தில் நாம் நமது ஜீவகாலத்திலேயே பிரத்தியக்ஷயமாய்ச் சிருட்டி இரகசியத்தைப் பார்த்து நம் நிலைமை யின்னதெனத் தெளிந்து, நாம் எவ்விதமிருப்போம் என்பதைத் தீர்மானிப்பது உத்தம மல்லவா? இதல்லாமல், பல மதங்களின் தாத்பரியப்படி நடப்பதும், ஒரு மதம் பிசகென்று, வேறொரு மதத்தைத் தழுவுவதும், நம்மிடம் பிரத்தியட்ச அநுபவமில்லாத நிலையில் நமக்கு யாது பயனளிக்கும்? இத்யாதி விஷயங்களை உத்தேசித்தே சகல ஜனங்களுக்கும் உபகாரார்த்தமாய், யாதொரு பாரபட்சமில்லாமல், ஸ்தூலத்திலேயே பிரக்ஞையுடன், குண்டலினியைக் காட்டிக் கொடுக்கும் சர்வ ஞானத்தையும் அறியச் செய்வித்து, ஸ்தூலத்திலேயே கைவல்ய ஸ்திதியைக் காட்டி, ஈசுவரனை யறிந்த ஞானியாய் ஆக்க வல்ல மெய் சமாதி மார்க்கமொன்றை குடந்தை க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட யோகால்ய மித்திர சங்கத்தின் குருநாதர் போதனையை யொட்டி இங்கு விளக்கத் துணிந்தோம்.

இலகுமுறை மெய்-சம-ஆதியோகம்

பிரம்மம் இது என்று நமக்குத் தெரிந்தால், அதை சுலபமாய்க் கண்டுபிடித்து விடலாம். அவ்விதம் தெரியாத நிலைமையில், அது இதுதானென்று சித்தாந்தம் செய்யாமல் அது ஏதோவொன்று (Some X) என்று வைத்துக்கொள்வது மேல். அந்த ஏதோ ஒன்றை காலையிலும், மாலையிலும் ஐந்து, பத்து நிமிடம் இதே

தாசனமிட்டு, தூங்காமல் தூங்கிப் பிரார்த்திக்கத் தொடங்குவோம். தூக்கம் வராமலிருப்பதற்காகச் சற்று ஆகாரம் உண்டு, களைப்பாறி மனதைக் கவலையற்று வைத்துக் கொண்டு, சௌகரியமாய்ப் படுத்துப் பிரார்த்தனை செய்வது உசிதம். என்ன பிரார்த்தனை செய்வது? பின் வருமாறு செய்யலாமாவென்று யோசித்துப் பார்ப்போம் :—

"பிரம்மமாயிருக்கும் ஏதோ ஒன்றே, உன்னைக் கண்டுபிடிக்க எனக்குச் சக்தி கொடு. அச்சக்தி என்னிடமில்லையே. உன்னை யறிவது யோகமென்றால், அவ் யோகத்தைச் செய்வதற்கு வேண்டிய யோக்யதை என்னிடம் தற்காலமில்லை யென்பது தெரிவிக்கவும் வேண்டுமா? அவ் யோக்யதையை நீ தானே அருள் புரிய வேண்டும். ஆதலால் போதுமான சக்தி கொடு. உனது சக்தி பெற்ற யான் உன்னைக் கண்டு பிடிப்பதும் கஷ்டமாகுமோ? உன்னை யாரென்றறிந்த பிறகு நான் மோட்சமடைந்து சாசுவத சுதந்திரனாய், இம்மண்ணுலகில் வாழ நீயே அருள் புரிவாயல்லவா? இந்த ஸ்தூலத்திலேயே பிரக்ஞாபங்கமின்றி, உனது தரிசனத்தையும் அதனால் உண்டாகும் தன்னிச்சையின் பூர்த்தியாகிய சாசுவத சுதந்திரமென்ற மோட்ச பதத்தையும் விரும்புகிறேன். கருணை புரிவாய். பிறப்பெடுத்த நான் இறக்காமல் உன்னை யறிந்து உனக்குச் சரிசமானமான நிலையை யடைய ஆசைப்படுவதே உனக்கு உவப்பாகுமன்றோ! அதுவே மெய் - சம - ஆதி என்று கருதுகிறேன். அது கிட்டினாலொழிய மோட்சமென்ற பதத்திற்கே அர்த்தம் ஏற்படவில்லையே. நிராசையாயிருத்தல் வேண்டுமென்பதும் ஓர் ஆசையல்லவா! எல்லா ஆசைகளும் பூர்த்தியடையவல்ல பிரம்ம தரிசனமும், பிரம்ம துல்லியமும் கிடைக்க வேண்டுமென்ற பேராசையைக் கைகூட்டி வைப்பாயாக! அப்போதுதான் கலி முடியும். (கலி என்றால் பேராசை யல்லவா?) ஏதையும் உண்டுபண்ணவல்ல சக்தி உன்னிடமுள்ளது. அச்சக்தியை நீ கொடுக்காவிடில், நான் உனக்குச் சமமாகி, என்னை நானறிந்து, நீ வேறு நான் வேறு அல்ல என்பதுணர்ந்து, நாம்தான் என்று நிச்சயித்து, நம்மை நாமே நமஸ்கரித்து, நம்மில், நாமாயிருக்கும் நம்மை நாமே தரிசனம்செய்து, நமது சுய இச்சை பரிமளிப்பதெவ்வாறு? அச்சக்தி யடைந்த பிறகு என் காமம் பூர்த்தியாகி அதன் கோடியை (முடிவை) எய்துமன்றோ! இது தானே காமகோடி பீடத்தின் அத்தியந்த இரகசியம்" என்றெல்லாம் எண்ணி, எண்ணி உடலுக்குள் நடக்கும் வேலைகளையும், போராட்டங்களையும், கதிகளையும் நன்கு ஊகித்து ஸ்தூல பிரக்ஞையை ஒருக்காலும் கைவிடாமல் முயன்று நிற்பதே நாம் சொல்லும் யோகம். இம்முயற்சி திருவினையாக்குமென்பதில் ஐயமுமுண்டோ? இதைப்பலர் செய்வதால் பிரம்மமே நேரில் தோன்றி, உபதேசம் செய்யும் அவசரம் உண்டாகுமல்லவா? பிரம்மத்தின் ஒரு சிறு அம்சம் மனித உருப்பெறும்போது, அதை அவதார புருஷனென்று கொண்டாடுகிறோம். அவ்வவதாரமும் நல்லோர் வேண்டுகோளுக் கிணங்கியே ஏற்படுவதாகப் புராணங்கள் கூறுகின்றன. ராவணனின் இம்சை தாங்காமல் ரிஷிகள் பாற்கடலின் கரையோரத்திலே நின்று ஆலையிலைமேல் யோக நித்திரை செய்யும் மகாவிஷ்ணுவைத் துதி செய்ததின் பயனாக ராமாவதாரம் ஏற்பட்டது என்பது உலகப் பிரசித்தம். அவதாரங்கள் துஷ்டர்களைச் சம்ஹரித்து, சிஷ்டர்களைப் பரிபாலித்து, தர்மத்தை நிலைநாட்டுவதற்காக ஏற்பட்டன. ஆனால் பல தடவை அவதார கட்டத்தில் நின்றும் பிரம்மாம்சங்கள் முடிவான மோட்சபதத்தை மனிதனுக்குக் கொடுக்கவில்லை யென்பது, அநுபவ பிரசித்தம். தற்கால நிலையை யோசிக்குங்கால் பிரளயகாலம் சமீபித்துவிட்டதென்றே சொல்லவேண்டும். பிரம்மம் இத்தருணம் அவதரிப்பது மிகப் பொருத்தமாகும். பல ஜனங்கள் சர்வேசுவரனின் பிரபு சக்தியை வரிக்க, அதன் பயனாக, அவன் முழு அளவுடன் அவதரித்தாலன்றி, மனிதன் மனம் குளிராது என்ற பிரார்த்தனை

வேத வியாச பகவான்

[வே. நாராயணன், எம். ஏ., எம். எல். எழுதியது]

வேதங்கள் கடவுளின் மூச்சுப் போன்றவை. மூச்சைக்கொண்டே ஒருவன் இருக்கிறான் என்று அறிகிறோம். வேதத்தைக்கொண்டே கடவுள் என்று ஒன்று இருக்கிறது என்று அறிகிறோம். ஒருவன் பிறக்கும்போதே அவனுக்கு மூச்சு என்பது ஏற்படுகின்றது. கடவுளோ ஆதியில்லாத அனாதிப் பொருள். காலத்தைக் கடந்து நிற்கும் பொருள். அதனால் அவனுடைய மூச்சாகிய வேதங்களும் தோற்றமும் கேடும் இல்லாத அனாதிப் பொருள். அவற்றிற்கு அந்தமும் இல்லை. காலத்தைக் கடந்தும் அவை அழியாதிருப்பவை. வேறொரு வகையிலும் வேதங்கள் அனந்தம்; அவை எண்ணில் அடங்காதவை. இந்த உண்மைகளை நாம் வேதத்தாலே தெரிந்து கொள்கிறோம்.

இவ்வுலகம் தோற்றுவாயை உடையது; காலக்கிரமத்திலே முற்றும் அழிந்து போகும் இயல்பை உடையது. இதனைத் தோற்றுவித்ததும் இறுதியில் அழிப்பதும் கடவுளே; அழித்தபின் மீண்டும் ஒரு பிரமதேவனைத் தோற்றுவித்து அவன் மூலமாய் உலகைப் படைக்கிறார். இப்பொழுதுள்ள உலகங்களைப் படைத்தவன் நான்முகனாகிய பிரமதேவன். அவனுக்கு என்றுமுள்ள வேதங்களைக் கடவுளே காட்டிக் கொடுத்தார்.

பிரமதேவனின் மனதினின்று தோன்றிய புத்திரர் வஸிஷ்ட முனிவர். இவர் எல்லா வேதங்களையும் கண்டறிந்தவர். விசுவாமித்திரரிடம் கருணைகொண்டு அவரைப் பிராம்மணராகச் செய்தவர். இவருக்கு மனைவியாக வாய்ந்தவள் அருந்ததி; இவளே உத்தம பத்தினியாதலால், புது மணவாளன் தன் பத்தினிக்கு வானத்திலே நக்ஷத்திர வடிவுகொண்டு பிரகாசிக்கும் இவளைக் காட்டுவது விவாஹச் சடங்குகளுள் ஒன்று.

வஸிஷ்டருடைய மக்கள் நூற்றுவருள் மூத்தவர் சக்தி என்னும் தருமாத்மா.

எட்டுத்திக்குகளிலும்முழங்குமேயானால், அதற்குப் பிரதி யொலியாய் சிவனின் உடுக்கைநாதம், துந்துபிநாதம் கிளம்பி, குரோதன என்ற அசுரகுணத்தை மனிதனின் இருதயத்திலிருந்து விரட்டியடிக்கும். ருத்ரோத்காரி, ரக்தாக்ஷி என்ற அசுர அமைப்பை மனித சமுதாயத்தில் நின்றுமகற்றி க்ஷய என்ற குறை முடிவைத் திருத்தி அக்ஷயமாக்கத்தக்க தருணம் இத் தாரண வருஷமே யாகும்.

மேற்கண்ட சமுதாய முயற்சி குருவில்லாத வித்தையாகாது; ஏனெனில் இம்முயற்சி "சுய இச்சை எக்காலத்தும் பரிமளிக்கும்" என்ற பிரம்ம சங்கல்பத்தை வெளி வீசுவதேயாகும். பிரம்மம், மனிதனாய், யோனி வாயிலாய்ப் பிறந்து, கர்ம தாய் தந்தையரால் கட்டப்பட்ட தன் உடலை யோகசக்தியால் சவமாக்கி, அவ்வுடலை எரித்துச் சாம்பலாக்கி வைக்கவும் ஏற்பாடுசெய்து, பிறகு, தன்னைத்தானே படைத்து, தான் முன்னே தாங்கி நின்ற உருவம் சிறிதும் மாறாமல் நம்முன் தோன்றினால், அவனையே பிரம்மமென்று எல்லோரும் பிரத்தியக்ஷ அநுபவ பூர்வமாய் ஒப்புக் கொள்ள முடியும். அப்புருஷோத்தமனைக் கண்டோர்க்கு முண்டோ கலி? தாரண வருஷம் மாசி மாதம் முதல் தேதி கலியுகம் முடியுமென்ற உண்மையை யறிந்தோர்க்கு வெகு சீக்கிரத்தில் பிரம்மத்தின் ஸ்வஸ்சொரூப தரிசினமும் கிடைக்குமென்ற நம்பிக்கை யிருப்பது ஆச்சர்யமன்று; அந்நம்பிக்கையை மற்றோர் ஏகடியம் செய்வது உசிதமா, ஆஸ்திக இலட்சணமா, என்று விவேகிகளே அறிந்து பார்க்கட்டும்.

அவருடைய பத்தினி அதிருசியந்தி என்பாள். சக்தி என்பவர் காட்டு வழியியே போகும்போது கல்மாஷபாதன் என்னும் அயோத்தி மன்னன் எதிரே வந்தான். ராஜ சேவகர்கள் இவரை வழிவிட்டு விலகும்படி சொன்னார்கள். "அந்தணனுக்கு அரசனும் வழிவிட வேண்டும். என்பது தருமம்; அதனால் அரசனே விலகிச் சொல்ல வேண்டும்" என்றார் சக்தி. அரசனே அவரை அதட்டினான். அவனை "நரமாமிசத்தைத் தின்னும் அரக்கனாவாய்" என்று முனிவர் சபித்தார். அப்படியே அரக்கனான அரசன் அம்முனிவரைக் கொன்று தின்றான். பிறகு அம்முனிவரின் தம்பியர் அனைவரையும் தின்றுவிட்டான்.

நூறு மக்களையும் இழந்த வஸிஷ்டர் தம்மை மாய்த்துக்கொள்ள முயன்றார். ஆனால் அவர் தேகம் வேதமயமாய் விட்டபடியால் அதனை அழித்துக்கொள்ள முடியவில்லை; புத்திரசோகத்தால் அலைந்துதிரிந்த இவர் பின்னால் ஒருநாள் வேதகோஷம் எழுந்தது; திரும்பிப் பார்த்து, 'யார்' என்றார். "தங்கள் மருமகள் அதிருசியந்தி" என்று பதில் வந்தது; "வேதகோஷம் செய்வது யார்" என்றார். "என் வயிற்றில் வளரும் தங்கள் பேரன்" என்று கேள்வியுற்றதும் வஸிஷ்டர் துன்பத்தை மறந்தார்; மருமகளுடன் சக்தியின் ஆசிரமத்திற்குச் சென்றார். காலக்கிரமத்திலே, கருப்பத்திலேயே வேதாத்தியயனஞ் செய்த பராசரன் என்னும் பேரப் பிள்ளை பிறந்தான். அவன் வஸிஷ்டரைத் தந்தையாக நினைந்திருந்தான். வயது வந்தபின், ஒருநாள் தந்தையாக நினைத்த வஸிஷ்டமுனிவர் பாட்டனாரே என்றும் தந்தைக்கு எவ்வாறு விபத்து நேர்ந்தது என்றும் தாயார் சொல்லக்கேட்டு உலகத்தையே அழித்துவிடுகிறேன் என்று புறப்பட்டான். வஸிஷ்டர் அவனைத் தேற்றி ஞானோபதேசஞ் செய்தார். அந்த ஞானத்தை எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு விஷ்ணு புராணத்தைப் பாடினார் பராசர முனிவர்.

பராசரமுனிவர் முக்காலத்தையும் உணர்ந்தவர். அவர் ஒருநாள் கங்கைக் கரையை அடைந்து அங்கே செம்படவப் பெண்ணாக வளர்ந்துவரும் ராஜ கன்னிகையான ஸத்யவதி என்னும் மத்ஸ்யகந்தியைக் கண்டார். "பெண்ணே, என்னை அக்கரைகொண்டு சேர்ப்பாயா?" என்றார். சிறு பெண்ணும் சம்மதித்தது. நதியின் நடுவில் ஒரு தீவு எழுந்தது. அங்கே படகு சென்றதும் எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. முனிவர், "பெண்ணே! இது சுபமான வேளை; லோகோத்தாரகனாக ஓர் உத்தமன் பிறப்பதற்கு ஏற்ற பொழுது; உன்னைப் பெரியவளாக்கி உன்னிடம் அவன் பிறக்கவேண்டும்; மீண்டும் நீ சிறு கன்னிகையாகி விடுவாய்" என்று அவள் சம்மதம் பெற்றார்.' இதுவே வியாசமுனிவர் தோன்றிய வரலாறு. முனிவரின் அருளால் மத்ஸ்யகந்தி என்பதுபோய் ஸத்யவதி பரிமளகந்தியானாள். இவளைத் தமது தந்தை சந்தனு மகாராசன் மணந்துகொள்ளும் பொருட்டே பீஷ்மர் தமக்கு ராஜ்யமும் விவாஹமும் வேண்டியதில்லை என்று சபதஞ் செய்துகொடுத்தார். 'தீவிலே பிறந்தவர் ஆதலால் த்வைபாயனர்' என்பதும், 'கருநிறமுடையவர் ஆதலால் க்ருஷ்ணர்' என்பதும், பராசர புத்திரரின் பெயர் ஆயிற்று.

இவர், கருப்ப வாஸத்திலே அத்தியயனஞ் செய்த தகப்பனாரிடமிருந்தும் கொட்பாட்டரான வஸிஷ்டரிடமிருந்தும் வேதங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். இவர் காலத்திலேயே எல்லா வேத வாக்குகளையும் ஒருவன் கற்பது சிரம சாத்தியமாகிவிட்டது. அதனால் அக்காலத்தில் வழக்கிலிருந்த வேத வசனங்களையெல்லாம் தொகுத்தும் நான்காகப் பிரித்தும் பாகுபாடு செய்தார். இவ்வாறு வேத பாகங்களைத் தொகுத்துப் பாகுபாடு செய்ததால் இவருக்கு வேதவியாசர் என்ற பெயர் எழுந்தது. நான்கு வேதங்களையும் படிப்பதற்கு நான்கு சிஷ்யர்களைத் தேர்ந்தெடுத்தார்; இருக்குவேதத்திற்குப் பைலு

ரையும் யஜுர்வேதத்திற்கு வைசம்பாயனரையும் ஸாமவேதத்திற்கு ஜைமினியையும் அதர்வவேதத்திற்கு ஸுமந்துவையும் என்று நியமித்து அவைகளை முறையே அத்தியயனஞ் செய்வித்தார். வேத வசனங்களின் உட்பொருளை 'ப்ரஹ்மஸூத்ர'ங்களாகச் சுருக்கிக் கூறினார்; அதனையே மீண்டும் விரிவாக 'மஹா பாரதம்' என்னும் வழிநூலிலே கூறினார்.

பாண்டவ வமிசத்தவனான ஜனமேஜயன் ஸர்ப்ப யாகம் ஒன்றைத் தொடங்கினான். அங்கே யதிருச்சையாய் வந்த வியாஸபகவானிடம் அம்மன்னவன் தன் முன்னோர்களான பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே நிகழ்ந்த பாரதப் போரைப்பற்றிச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறான். அப்பொழுது அவர் அங்குவந்திருந்த வைசம்பாயனர் என்னும் தம்முடைய சிஷ்யரைப் பார்த்து, "ஏற்கெனவே நான் உனக்குச் சொன்ன பிரகாரமாய்ப் பாரதக்கதையை இவருக்குச் சொல்லு" என்றார். இது தான் மஹா பாரதம் பிறந்த வரலாறு.

இந்த இதிஹாஸத்தைக் கேட்ட பராசரர் தம்முடைய சிஷ்யரான மைத்ரேயரிடம் "மைத்ரேய! கிருஷ்ண த்வைபாயனரான வியாஸரை ஸ்ரீமந் நாராயணன் என்றே கொள்வாயாக. வேறு யார்தாம் இவ்வுலகில் மஹா பாரதத்தை இயற்றியவர் ஆவர்?" என்று விளக்கினார். ஸ்ரீமந் நாராயணன் அவதாரமாவதற்கென்றே இவர் தவமிருந்தும் சுபவேளைக்குக் காத்திருந்தும் பெற்ற பிள்ளையன்றோ? மஹா பாரதத்திலே வேதப்பொருள் நன்றாக விளக்கப்படுவதாலும் அதில் நடுநாயகமாக பகவத்கீதை என்னும் உபநிஷத் அமைத்திருப்பதாலும் வேதங்களைப் பாகுபாடு செய்து வேதாந்தப் பொருளை ப்ரஹ்மஸூத்ரங்களிலே சுருங்கக் கூறிய வியாஸபகவானே விரித்துக் கூறிய நூலாதலாலும், மஹா பாரதம் ஐந்தாவது வேதமாகக் கொள்ளப்படுகின்றது.

'நல்லோர்க்குரிய செல்வம் எது?' என்னும் வினாவிற்கு விடைகூறுவதாய் அமைந்துள்ளது ஒரு வேதவாக்கியம். "வேதமாகிய திருவே நல்லோர்களின் அழிவற்ற செல்வம்" என்று கூறுகின்றது. வேதங்களாகிய அழியாச் செல்வத்தை நாம் இழந்தும், பயன்படுத்திக் கொள்ளாமலும் பரிதவிக்கக் கூடாது என்றே அவ்வேதங்களை மூச்சாகவுடைய கடவுளே வேதங்களை முற்றும் ஓதியுணர்ந்த வமிசத்திலே பிறந்து அவற்றைப் பாகுபடுத்தித் தொகுத்தும் பிரித்தும் அவற்றை இடையறாது போற்றும்படி ஒரு ஜாதியினரை நியமித்தும் அவற்றின் பொருளைச் சுருங்கிய ஸூத்ரங்களாலும் விரிவான இதிஹாஸ புராணங்களாலும் கூறியும் வேதமதத்தினராகிய நமக்குப் பேருதவி செய்திருக்கிறார்.

ஆடி மாதந் தொடங்கி நான்கு மாதங்கள் கார்காலம் என்னப்படுகின்றன. முற்காலத்தில் நமது நாட்டில் வேதமுணர்ந்த ஸங்யாசிகள் ஊரூராய்ச் சஞ்சரிப்பதைத் தவிர்த்து அங்கங்கே இந்த நான்கு மாதமும் தங்கியிருப்பார்கள். க்ஷத்திரியர் மழைக்காலம் எப்பொழுது முடியுமென்றுபோர்மேற் செல்லாது தங்களூரிலேயே தங்கியிருப்பார்கள். வியாபாரஞ் செய்யும் வைசியர்களும் மழைக்காலந் தொடங்குமுன் தம்மூருக்கு வந்து விடுவார்கள். பயிர் அறுவடையாகி உழவர்களும் வியவசாயிகளும் சும்மா இருப்பார்கள். எனவே, இக்காலமே வேதங்களை அத்தியயனஞ் செய்தும் வேதப் பொருளைச் சொல்லக்கேட்டும் ஞானம் பெறுவதற்கு ஏற்ற காலமாகும் என்று ஆஷாட பௌர்ணமியில் வியாஸ பூஜையையும் சிராவண பௌர்ணமியில் அத்தியயனத் தொடக்கத்தையும் நம்முன்னோர்கள் விதித்துள்ளார்கள்.

விடுதலை

[வே. ந. சுந்தரராமன், எம். ஏ. எழுதியது]

1

ஹரிஹரன் அன்று ஆபீஸுக்குப் போனதும் போகாததுமாய் அவனை மானேஜர் கூப்பிடுவதாக ஆபீஸ் வேலையாள் வந்து அவனிடம் சொன்னான். உடனே மானேஜரின்முன் அவன் ஆஜரானான். மேஜையின்மேல் குவிந்திருந்த அன்று வந்த கடிதக் குவியலிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து அவன்முன் நீட்டி மானேஜர், 'என்ன, ஹரிஹரா, ரகுபதிக்கு என்ன வந்துவிட்டது? வர வர அவன் ஆபீஸுக்குச் சரிவர வருவதில்லை. ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி ஒவ்வொரு முறையும் லீவு கேட்கிறான். இன்று அவனுக்கு உடம்பு அசௌகரியமாம். நீதான் அவன் வீட்டிற்கு அருகிலிருக்கிறாய்: அவனுக்கு என்ன உடம்பு தெரியுமா? என்று கேட்டார். அதற்கு ஹரிஹரன்,

'எனக்குத் தெரியாது, ஸார். நேற்றிரவு கூட அவனிடம் பேசிக்கொண்டிருந்தேனே! சரியாகத்தான் இருந்தான். இன்று சாயந்திரம் ஆபீஸ் முடிந்ததும் நான் அவனைப் பார்த்து, அவனுக்கு என்ன உடம்பென்பதை நாளைக்கு உங்களுக்குத் தெரிவிக்கிறேன்' என்று பணிவுடன் பதில் சொன்னான்.

'எனக்கென்னவோ அந்தப் பேர்வழியின்மேல் ஒரு பெருத்த சந்தேகம். இப்படி யெல்லாம் சாக்குச் சொல்லிவிட்டு அவன் கட்டாயம் மேற்குத் தெருவிற்குத்தான் செல்லுகிறான்' என்று சொல்லிவிட்டு மீண்டும் கடிதங்களைப் பிரித்துப் பார்க்கும் வேலையில் மானேஜர் முனைந்தார். ஹரிஹரனும் தன்னிடத்திற்குத் திரும்பி வந்தான்.

அன்று முழுவதும் அவனுக்கு வேலை ஓடவில்லை. மாலை ஐந்து மணி, ஆபீஸ் மூடும் சமயம், எப்பொழுது வரும் என்று காத்திருந்து, மணி ஐந்தடித்ததும் ரகுபதியின் வீட்டை நோக்கி நடந்தான். அங்கு சென்றதும், 'ரகுபதி இருக்கிறானா' என்று கேட்டதற்கு, ரகுபதியின் மனைவி விசாலம், 'இல்லையே, மாமா காலையில் சாப்பிட்டுவிட்டுச் சென்றவர் இன்னும் ஆபீஸிலிருந்தே வரவில்லையே. ஏன்? உங்களுடன் புறப்படவில்லையா, அத்தான்?" என்றாள். ஹரிஹரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தன் மனத்துள் எழுந்த உணர்ச்சியைத் தன் முகம் வெளிக்காட்டாமல் சமாளித்துக் கொண்டு, 'சரி, அப்புறம் வருகிறேன்' என்று அவள் கேட்ட கேள்விக்கு விடையென்னும் சாக்காகச் சொல்லிவிட்டு,

'இவ்வளவு தூரம் முற்றிவிட்டதா' என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தான்.

2

ஹரிஹரனும் ரகுபதியும் பரஸ்பர பால்ய நண்பர்கள். ஒரே ஊர். சம வயது. குழந்தைப் பருவத்திலிருந்தே ஒன்றாய் வளர்ந்தவர்கள். கொஞ்சம் எட்டின உறவுகூட. ஊரில் அவர்களை ராமலக்ஷ்மணர்கள் என்று சொல்லுவார்கள். அவ்வளவு இணைபிரியாமல் இருந்தனர். பள்ளிக்கூடத்திலும் ஒரே வகுப்பில் வாசித்தனர். படிப்பில் இவர்களுக்குள் ஏற்பட்ட போட்டியும் இவர்களை மேன்மேலும் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் படிக்கத் தூண்டியதே யொழிய இவர்களுடைய நட்பிற்குச் சிறிதும் பங்கம் விளைவிக்கவில்லை.

சம வயதும், மற்ற எல்லா விஷயங்களிலும் சரி சமத்துவமும் இருந்த இவர்களுக்கு ஒரே சமயத்தில் கலியாணம் ஆனதும், சென்னையில் ஒரே ஆபீஸில் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில்

வேலையானதும் இயற்கை யிழைத்த ஓர் விசித்திரமே!

ஹரிஹரனுக்கும் ரகுபதிக்கும் உறவிலேயே பெண் பார்த்து மணஞ் செய்திருந்தன ராகையால், அத்தம்பதிகள் நால்வரும் ஒருவரை யொருவர் கலியாணத்திற்கு முன்பே நன்கு அறிந்திருந்தனர். ரகுபதிக்கு வாழ்க்கைத் துணைவியாய் வாய்த்திருந்த விசாலம் அவனுக்கு ஒரு முறையில் ஒன்றுவிட்ட மருமகளாக வேண்டும். எனவே அவள் தன் கலியாணத்திற்குப் பின்பும் தன் பதியை 'மாமா' என்றே குறித்தும் அழைத்தும் வந்தாள். விசாலத்திற்கு ஹரிஹரன் அத்தானாக வேண்டும். ஆகையால் அவனையும் அவள் சகஜமாய் "அத்தான்" என்றே அழைத்து வந்தாள். அத்தான் அம்மான்சேய், அத்தான் - அம்மங்காள், இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைதான் அலாதியாயிற்றே!

ஹரிஹரனின் மனைவி மரகதம். விசாலமும் மரகதமும் நல்ல கட்டுமஸ்துள்ள மேனிவாய்ந்தவர்கள்; நல்ல உயரம்; இருவர் முகத்திலும் துருதுரு என்று ஒரு களை; நல்ல சிவந்த நிறம்; திறந்த மூக்கும் விழியும். அவர்கள் முகத்தில் புன்முறுவல் அரும்புகையில் அவர்கள் அதரத்தையும் பற்களையும், கவிகள் வர்ணித்திருப்பதுபோல், மாதுளைமொட்டிற்குத்தான் ஒப்பிடலாம். சிரிக்கையில் கன்னத்தில் விழும் குழிகள் விசாலத்தின் அழகை ஒருபடி அதிகரித்தன.

இருவரும் நல்ல குணவதிகள். அதிகப் படிப்பு இல்லை; ஆனால் நிரக்ஷரகுக்ஷிகளுமில்லை. 'ஹைஸ்கூல்' படிப்பு கொஞ்சம் இருந்ததால் வீட்டிற்கு வரும் இங்கிலீஷ் கடிதங்களைப் படித்து அர்த்தம் செய்துகொள்ளத்தக்க சக்தி யிருந்தது. இருவரும் தத்தம் கணவர்களின் வளத்திற்குத் தக்கபடி நடந்துகொள்ளும் சுபாவமுடையவர்கள்.

இத்தகைய மனைவி யொருத்தி கிடைத்து விட்டால் மனிதனுக்கு வேறு என்ன வேண்டும்? எனவே ஹரிஹரனும் ரகுபதியும் சென்னையில் தனிக் குடித்தனம் தொடங்குகையில் அவர்கள் வாழ்க்கை இன்பகரமாய் அமைந்தது என்று சொல்லவும் வேண்டுமா?

ரகுபதியின் துர் அதிர்ஷ்டம் அவன் வாழ்க்கையில் சீக்கிரத்தில் ஒரு கொடிய மாறுதலைப் புகுத்திவிட்டது. கெட்ட சகவாசம் ஏற்பட்டு 'மேற்குத் தெரு'வை அவன் நாடலானான். தங்கள் உடலையும் மானத்தையும் விற்று ஜீவனம் செய்யும் மாதர்கள் வசிக்கும் இடங்கள் பலவற்றுள் சென்னையில் 'மேற்குத் தெரு' என்பதும் ஒன்று. ரகுபதியின் நடத்தை முதலில் ரகசியமாகவே இருந்ததென்றாலும், நாளடைவில் எங்கும் பரவிற்று. அவனுடைய ஆபீஸ் மானேஜர் காதிலும் அது எட்டியிருந்த தென்பதை ஆரம்பத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சியே விளக்கும்.

3

ரகுபதியைத் தன் மாய வலைக்குள் சிக்க வைத்த மங்கையின் பெயர் பாலாமணி. மாநிறந்தான்; முகத்தில் காணப்பட்ட பொலிவு பெரும்பாலும் செயற்கையில் ஏற்பட்டதுதான். தன் கண்களிலிருந்த ஒருவிதப் பார்வையும் இசையில் இருந்த தேர்ச்சியுமே ஆடவர்களை மயக்க அவளிடமிருந்த ஆயுதங்கள். ரகுபதிக்கு சங்கீதத்தில் பைத்தியமாகையால் அவள் வலையில் அவன் சிக்குவது எளிதாயிற்று.

ரகுபதியின் நடத்தை விசாலத்திற்கு வெகு நாட்கள் வரையில் தெரியாமலிருந்தது. அதைப்பற்றி அவளிடம் கூறி அவளைப் புண்படுத்த ஹரிஹரனுக்கும் மனம் இடங் கொடுக்கவில்லை. வீட்டில் முன்போல் செலவிற்குப் பணமில்லாமற் போனதைமட்டும் அவள் கவனித்தாளே யொழிய அதன் காரணத்தை ஊகிக்க முடியவில்லை. ஆனால் ஊர் முழுவதும் பரவிய விஷயம் அவள் காதிற்கு எவ்வளவு நாட்கள் எட்டாமலிருக்க முடியும்? விஷயம் தெரிந்ததுமுதல் மனம் உடைந்து, உருக்குலைந்து, சோகமே உருவெடுத்ததுபோல் ஆனாள். ரகுபதியும் அவளை வெறுக்க ஆரம்பித்தான்.

நண்பன் என்னும் உரிமையைக் கொண்டு ஹரிஹரன் ரகுபதியைத் திருத்த முயன்றதெல்லாம் வீணாயின. ஒரு

சமயம் இதைக் குறித்து அடியிற்கண்ட சம்பாஷணை அவர்களிடை நடந்தது.

ஹரிஹரன் :—ஏண்டா, ரகு, இப்படி அநியாயமாய் ஏண்டா கெட்டுப் போகிறாய்? கிளிபோல் வீட்டில் ஒரு தங்கப் பதுமை யிருக்க இந்த அவலக்ஷணத்தை ஏண்டா கட்டிக்கொண்டு அழுகிறாய்?

ரகுபதி :—இந்தா, ஹரிஹரா. நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு. 'பாலா' வை மட்டும் (இதுதான் அவ் வேசைக்கு இவன் அளித்த செல்லப் பெயர்) ஒன்றும் சொல்லாதே. உண்மை யில் அவள் விஷயம் ஒன்றும் உனக்குத் தெரியாது. தெரிந்தால் நீ இப்படியெல்லாம் உளறமாட்டாய். அவள் நடத்தைக்கு உங்கள் பதிவிரதைக் குடும்பஸ்திரீகள் எவள் நடத்தையும் உரைபோடக் காணாது. என்பேரில் இவளுக்கிருக்கும் உள்ளன்பு உனக்கென்ன தெரியும்?

ஹரி :—அவ்வளவு விசேஷம் அவளிடத்தில் என்னதா னிருக்கிறதென்று கொஞ்சம் சொல்லேன் பார்க்கலாம்.

ரகு :—இவள் தாசியேயல்ல. உயர்ந்த ஜாதியில் பிறந்த பெண்தான். சிறு வயதில் பிறரால் களவாடப்பட்டுப் பின் ஒரு தாசியால் வளர்க்கப்பட்டவள். என்னைத் தவிர வேறு ஒரு புருஷனின் நட்பையும் இவள் அறியாள். ஒருவனையே சரணடைந்து நேர்வழியில் காலத்தைப் போக்குவதென்று வெகு நாட்களாய் இவள் மனத்தில் உறுதி செய்துகொண்டிருக்கிறாள். அதன்படியே என்னை தெய்வத்திற்கும் மேலாகக் கருதுகிறாள். இவள் இம்மாதிரி யிருக்கையில் நான் எப்படி இவளை உதறித் தள்ளிவிடுவது?

ஹரி:—இதெல்லாம் உண்மை யென்பதற்கு நீ என்ன ருசுவைக் கண்டாய்? எல்லாம் அவள் சொல்லுவது தானே?

ரகு :—ருசு வேறு வேண்டுமா? அவளுக்கு என்பேரிலிருக்கும் பிரியம் ஒன்றே போதாதா?

ஹரிஹரனுக்கும் ரகுபதி சொன்னதில் ஒருகால் உண்மை யிருக்குமோ என்று தோன்றிற்று. இம்மாதிரிப் பால்யத்தில் தாங்கள் பிறந்த குடியிலிருந்து வெளியேற்றப்பட்டுப் பின்னர் துன்பப் படும்படி நேர்ந்த அபலைகள் சிலரின் வரலாறுகளை அவன் அதற்முன் கேட்டிருந்தான். அவர்களுக்காக அவன் மனமுருகியிருக்கிறான். அத்தகைய ஸ்திரீ ஒருத்தியையாவது தன் வாழ்நாளில் விடுதலை செய்யவேண்டும் என்று அவன் சங்கற்பம் செய்துகொண்டு மிருந்தான். இந்த பாலாமணி யென்பவள் அத்தகைய அபலைகளுள் ஒருவளாக விருந்தாலோ? ஏன் இருக்கலாகாது? ரகுபதிதான் அவ்வளவு சாதிக்கிறானே. அவளை விடுவித்தால் தன் சங்கற்பமும் நிறைவேறும். இத்தகைய எண்ணங்கள் அவன் மனத்தை நிரப்ப அன்று அவன் வீடுவந்து சேர்ந்தான்.

4

என்னதான் பாலாமணிக்கு இரங்கினான் என்றாலும் ஹரிஹரனுக்கு ரகுபதியின் ஒழுங்கற்ற நடத்தைமட்டும் பிடிக்கவில்லை. ஆகையால் பாலாமணியையும் விடுவித்து, அதே சமயத்தில் ரகுபதியையும் திருத்துவதற்குத் தக்க வழி தேடிக் கொண்டிருந்தான்.

ஒருநாள் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அது அவன் ஆபீஸில் வேலை செய்துகொண்டிருந்த சமயம். உடனே ரகுபதியிடம் போய் அவனைத் தனியாக அழைத்து அவனிடம் பின் வருமாறு சம்பாஷிக்கலானான் :—

ஹரி :—ரகு, எனக்கு ஒன்று தோன்றுகிறது. நான் சொல்லுகிறபடி நீ செய்தால் உன் வாழ்க்கையும் ஒழுங்குபடும். உன் 'பாலாவு'க்கும் விடுதலை ஏற்பட்டு கௌரவ வாழ்வு உண்டாகும்.

ரகு :-என்ன, சொல்லேன் பார்க்கலாம்.

ஹரி :—நீதான் அவளுக்கு உன் பேரில் உயிர் என்கிறாயே. உன்னை இரண்டாந்தாரமாகக் கலியாணம் செய்துகொண்டு உன் வீட்டிலேயே வந்து விசாலத்துடன் இருக்கச் சொல்லேன்.

ரகு :—அதற்கென்ன, நான் தயார் தான். 'பாலா'வைப் பற்றியும் கேட்க வேண்டாம். ஆனால் விசாலம் இதற் கிணங்கவேண்டுமே.

ஹரி :—விசாலம் இதற்கு ஒருநாளும் தடை சொல்லமாட்டாள். அதற்கு நான் ஜவாப்தாரி. உன்மேல் அவளுக்கிருக்கும் உண்மையான வாஞ்சை உனக்குச் சந்தோஷத்தைத் தரக்கூடிய எந்தக் காரியத்திற்கும் அவளை இணங்கச் செய்யும். உன் 'பாலா'வின் மனத்தை அறிவது தான் முக்கியம் என்று தோன்றிற்று.

ரகு :—அட, பைத்தியமே. 'பாலா' வின்பேரில் உனக்கு இன்னும் சந்தேகமா? நான் இவ்வளவு சொல்லியிருந்தும்.

ஹரி :—இல்லை, எதற்கும் ஒரு வார்த்தை அவளையும் கேட்டால்தான் அதில் என்ன பிசகு?

ரகு :—சரி, இன்று மாலை ஆபீஸ் விட்டதும் நேராக அவளிடம் போகிறேன். வேண்டுமானால் நீயும் என்னுடன் வா. உன் முன்னிலையிலேயே அவள் சம்மதிக்கிறாள் பார்.

ஹரி :—மாலையென்ன, இப்பொழுதே கிளம்பலாமே. நான் 'மானேஜரி'டம் நம்மிருவருக்கும் 'லீவு' வாங்கிவிடுகிறேன்.

5

'மானேஜரி'ன் அனுமதி கிடைத்ததும் இருவரும் 'மேற்குத் தெரு'வை நோக்கி நடந்தனர். தன்னுடைய காதலியின் பரிசுத்தமான அன்பைத் தன் நண்பனுக்குக் காட்ட ஒரு தருணம் கிடைத்ததைக் குறித்து ரகுபதியின் மனம் மகிழ்ந்தது.

வேசியர் கும்பலிலிருந்து ஒரு அபலையைமீட்டுச் சரியான பாதையில் அவள் வாழ்க்கையைச் சீர்திருத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் தனக்குக் கிடைத்ததைப் பற்றி ஹரிஹரனுக்கும் உள்ளுக்குள் பூரிப்புதான்.

இவ்வாறு எண்ணமிட்டபடியே இருவரும் பாலாமணியின் வீட்டை அணுகினர். வீட்டின் வெளிக் கதவு தாளிடப்படவில்லை. உள்ளே நுழைந்ததும் அங்கு ஒரு ஜன்னல் வழியாக இவர்கள் கண்ணிற்பட்ட ஒரு காட்சி இருவரையும் திடுக்கிடச் செய்தது.

ஒரு கட்டிலில், தன் மடியில் ஒரு ஆடவனை இருத்தி அவனுக்குப் பாலாமணி வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்த காட்சியை இருவரும் கண்ணுற்றனர். உள்ளே செல்ல அவர்கள் கால் எழவில்லை. ஒருக்கணம் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். சற்றுநேரம் மௌனம் குடிகொண்டது. தலையைக் கீழே தொங்கவிட்டவனாய், 'அடி கள்ளி!' என்று முணுமுணுத்த வண்ணம் ரகுபதி பெருமூச்சுவிட்டான். உடனே சரேலென்று ஹரிஹரனின் கையைப் பிடித்துக்கொண்டு, 'வா, ஹரிஹரா, போகலாம்' என்று சொல்லித் தன் வீட்டைநோக்கிச் சென்றான். ஒன்றுஞ் சொல்லாமல் ஹரிஹரனும் அவனைப் பின் தொடர்ந்தான்.

6

கதவு தட்டிய ஓசை கேட்டதும் சோர்ந்த முகத்துடன் கதவைத் திறந்த விசாலத்திற்கு நடுப்பகலில் இவ்விருவரையுங் காண ஒரே திகைப்பு உண்டாயிற்று.

'விசாலம், என்னை மன்னி. இன்றுதான் நான் உண்மைக் காதலுக்கும் போலிச் சாகசத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்தேன். என் கண்களைத் திறந்த புண்ணியவான் இவன்தான், என்றான். அதற்குமேல் அவனைப் பேசவிடாமல் அவன் உதடுகள் துடித்தன. விசாலத்திற்கு எல்லாம் வியப்பாயிருந்தது. ஹரிஹரன் ஏதோ சாக்குச் சொல்லி மாலையில் வருவதாக வாக்களித்துவிட்டு, விடை பெற்றுக்கொண்டான். தன் வீட்டை நோக்கி நடக்கையில், "யாரை விடுதலை செய்ய முயன்றேன், யாருக்கு விடுதலை கிட்டிற்று, என்ன ஆச்சரியம்" என்று சொல்லி வியந்தான்.

ஹரிஹரன் சென்றவுடன் தன்முன் ஸ்தம்பித்து நின்ற விசாலத்தை நோக்கி ரகுபதி, "விசாலம், என் கண்ணே, நான் இத்தனை நாட்கள் உனக்கு இழைத்த கொடுமைகளுக்கு எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடு" என்றான்.

"இந்தாருங்கள் என் தண்டனை" என்று சொல்லியவண்ணம் விசாலம் அவனை இறுகத் தழுவிக்கொண்டாள். மலமலவென்று அவள் கண்களிலிருந்து நீர் சொரிந்தது.

காலஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா
பண்டிதராயிருந்த மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்னகர, மஹோபதேசக,
பிரும்மஶ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

கீர்த்தனை 6

நாதநாமக்ரியா ராகம்] [ஆதி தாளம்

ஸாஹித்யம்

பல்லவி

பரதேவதாம் க்ரமாச்ரயே

அனுபல்லவி

சுரபல்லவ வாஞ்சித புஸ்தக ஸிதபத்ம
சுகஸ்படி கோபலாம்.

சரணம்

தரமந்த ஹாஸான நாம்போரு ஹாம்
ஸுராதீச வக்த்ராம்புஜ ஹம்ஸ யோஷாம்
முராராதி முக்யை: ஸுரை: ஸேவ்யமானம்
பராம் பாபதூராம் கவியக்ஞ நாத:

தாத்பர்யம்

துளிர்போன்ற தன் கைகளில் அலங்காரமாய் தரிக்கப்பட்ட புஸ்தகம், வெண்டாமரை, கிளி, ஸ்படிக மாலை இவைகளையுடையவளும், புன்சிரிப்போடு கூடிய முகத்தாமரையுடையவளும், ஸுரர்களுக்கு நாயகனான பிரும்மாவின் முகங்களாகிற தாமரை புஷ்பங்களில் (சஞ்சரிக்கும்) பெண் ஹம்ஸமாகிறவளும், முராரி (விஷ்ணு) முதலிய தேவர்களால் வணங்கப்பட்டவளும், வாங்மன ஸுக்கு எட்டாதவளும்; களங்கமற்றவளும், பரதேவதையுமான ஸ்ரீ ஸரஸ்வதி தேவியை யக்ஞேச்வரனான நான் சரணமடைகின்றேன்.

பல்லவி

(1)	பஸரீத	பா	ம மதபா	மகா
	பர தேவவ	தாஆ	ஆம் க்ரமா	ச்ரயேஎ
(2)	அ ஷ	பதநித	தப	ஷ
	அ	தஅஅஅ	அஅம்	

அனுபல்லவி

(1) பதநீ நி ஸா | அ பஸநி | இ த பா
சுரபல் ல வாஆ | ஆஞ் சிதபு | உஸ் த கஅ

அ
அ

(2) பதநீ நி ஸா | அ பஸநி | இ நிஸா
சுரபல் ல வாஆ | ஆஞ் சிதபு | உஸ்த கஅ

(a) அ பஸநீத பத நி | இ நித பா | ம பா
அ ஸித பஅத்ம அஉ க | அ ஸ்படிகோ | ருப லாஆ

(b) அ ஷை | ஷை | ஷை கமபத
ஆம் | | லஅஅஅ

நிஸ பரதேவதாம்
அஅம்

சரணம்

ரிம மாமமமா | மதப | அ மகா
தர மந்தஹாஸா | நநாம்போ | ஓ ருஹ்மாஆ

அ மத பாமகமா | ரிககா | ம(க)ரிஸ
ஆம் ஸுரர் தீஇ சவக்த்ராம் | புஜேஹ | அம்ஸயோஷ

அ
ஆம்

பத நீத பதநீ | இ பஸநி | இ த நிஸ
முர்ராரதி முஉக்யை | ஸ் ஸுரைஸ்ஸே | வவ்ய மாஹ

(a) அ பஸ நீ தபதநீ | இ பத ப | அ மபப
ஆம் பராம் பா பதஉரா | ஆம் கவி ய | அக் ஞநாதோ

(b) அ ஷை | ஷை | கமபத
ஓ | | நஅதஅ

நிஸ பரதேவாம்
அஅ:



The Vanguard Insurance Company Ltd.

H. O. 308/309, Linghi Chetty Street, G. T. Madras

POINTERS OF PROGRESS

- Lowest Expense Ratio
- Highest Bonus Possibilities
- Cent per cent Security to Policy-holders
- Excellent terms to Field Workers
- Decent return to Share holders

See whether we satisfy all these requirements.
If you are satisfied, Tell others. If not, Tell us.

Total Investments in Government and other Approved Securities : Rs. 4 lakhs.

H. D. RAJAH,
General Manager.

இயந்திரமா, அல்லது மாடுகளா?

[எஸ். சாம்பசிவம்]

"ஆளுக்கொரு குட்டுக் குட்டினல், அடியேன் தலை மொட்டை" என்ற நிலைமையில் இந்திய விவசாயம் இருந்து வருகிறது. இதற்கு வங்காளப் பஞ்சமே சிறந்த அத்தாட்சி. இந்திய விவசாயத்தைப் பெரிய வியாதி பீடித்துவிட்டது என்ற உண்மை தூங்கிக்கொண்டிருந்தவர்களையும் தற்சமயம் எழுப்பிவிட்டிருக்கிறது. அதன் பலனுக விவசாய அபிவிருத்தித் திட்டங்களும் முளைத்து வருவதை நாம் பார்த்து வருகிறோம்.

இவையெல்லாம் நல்ல சகுனங்கள் தான். எப்படி வண்டிக்குப் பின்னல் மாட்டைப் பூட்டுவது பெரிய மடமையோ, அதைப்போல் விவசாயத்தை சீர்படுத்தாமல் தொழில் அபிவிருத்திக்குத் திட்டங்கள் போடுவது பெரிய மடமையாகும். ஏனென்றால், விவசாயமே இந்தியப் பொருளாதார அமைப்பின் அஸ்திவாரம்; அதன்மேல் எழுப்பப்பட்டிருக்கும் கட்டிடந்தான் தொழிற்சாலைகள். ஆகையால், முதலில் விவசாயப் புரட்சி ஏற்பட வேண்டுமென்று பலர் சொல்வதில் உண்மை நிறைந்து கிடக்கின்றது. இவ்வித விவசாயப் புரட்சி சாத்தியமாக, திட்டங்கள் வகுப்பதே சிறந்த முறையாகும்.

* * *

நிற்க, விவசாய அபிவிருத்தியின் சில அம்சங்களை முதலில் ஆராயலாம்.

விவசாய உற்பத்தியை அதிகரிப்பதே விவசாய அபிவிருத்தித் திட்டங்களின் நோக்கம். இங்கு ஒரு முக்கியமான பிரச்னை எழுகிறது. அதாவது: தொழிற்சாலைகளுக்கு வேண்டிய சணல், பஞ்சு, எண்ணெ வித்துக்கள் போன்ற மூலப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வது முக்கியமா? அல்லது உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பது முக்கியமா?

இப்பொழுது உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் 40 கோடி மக்களுக்கும் போதுமா என்று கேட்டால், போதவே போதாது என்றுதான் சொல்லவேண்டும். அத்துடன், சராசரியில் ஒரு இந்தியனுக்குக் கிடைக்கும் உணவுப் பொருள்களில் தேக ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத சத்துக்களும் வெகு குறைவு என்று நிபுணர் கருதுகின்றனர். ஆகையால், உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதே முக்கியம் என்று சொல்லவும் வேண்டியதில்லை.

தற்சமயம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மூலப் பொருள்களையெல்லாம் நம்நாட்டிலேயே உபயோகிக்க முடியாமல் பெருவாரியாக ஏற்றுமதி செய்து வருகிறோம். பிற்காலத்தில் தொழிற்சாலைகள் அதிகரித்தால், இப்பொழுது ஏற்றுமதியாகும் பொருள்கள் இந்தியாவிலேயே உபயோகிக்கப் படலாம். பிற்காலத்தில் இப்பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவது என்பது உணவுப் பொருள் உற்பத்திக்கு இடஞ்சலாய்த்தான் ஏற்படும். ஆனல், உணவுப் பொருள் உற்பத்தி பெருகினல், அவைகளின் விலைகள் குறையலாம். விலைகள் குறைந்தால், இலாபமும் குறையலாம்; இலாபம் குறைந்தால், உற்பத்தியும் குறையக்கூடும். இவ்வித நெருக்கடியைத் தவிர்க்க, இந்திய தேசீய அரசாங்கம் திட்டம் போட்டு கட்டுப்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், பெருக்கப்பட்ட உற்பத்தி மக்களின் தேவைகளைத் திருப்தி செய்யக்கூடும். இதற்கு விவசாய சீர்திருத்தங்கள் (Agrarian Reforms) அனுகூலமாயிருக்கும். "இலாபம்" என்ற பொல்லாப் பேய் உற்பத்தியை பாதிக்கவிடக் கூடாது. திட்டப்படி, ஒரு பக்கத்தில் மக்களின்

வாங்கும் சக்தியை அதிகப்படுத்தினால், அதிகரித்த உணவுப் பொருள்களை விற்பதில் ஒன்றும் கஷ்டமிருக்காது. சமூக நலனை முக்கியமென்று திட்டம் வகுத்தால், முதலாளிகளின் இலாபம் குறுக்கே நிற்பது ஒழிந்துபோகும்.

* * *

மேற்கண்டபடி, உற்பத்தியைப் பெருக்க பல வழிகள் இருக்கின்றன. இயந்திர சகாப்தமான இருபதாவது நூற்றாண்டில், அமெரிக்கா போன்ற நாடுகள் விவசாயத்திலும் பெருவாரியாக இயந்திரங்களை உபயோகிக்கின்றன. உழுவதற்கு இயந்திரம், விதைக்க இயந்திரம், அறுவடை செய்ய இயந்திரம், மேடு பள்ளத்தைச் சரிப்படுத்த இயந்திரம் - இன்னம் எவ்வளவோ இயந்திரங்களை விவசாயத்தில் உபயோகித்து, உற்பத்தியைப் பிரமாதமாக பெருக்கி இருக்கின்றன. என்பது உண்மையே. அப்படி இயந்திர பூதங்களை உபயோகித்ததின் பலன் என்ன? அதுதான், மிகப் பணக்கார நாடான அமெரிக்காவிலேயே வேலையில்லாத் திண்டாட்டம்! 30 வருஷங்களுக்கு முன்னால், அந்த நாட்டில் 10-ல் 9 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார்கள்; இப்பொழுதோ 10-ல் 3 குடும்பங்களே அத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். மனிதனின் வேலையைப் பெருவாரியாக இரும்பு செய்தால், மனிதன் கிராமங்களை விட்டுவிட்டு, நகரம் என்ற நரகத்தின் தெருக்களில் சோகத்துடன் அலையவேண்டியது தானே? ஆகையால், இதிலிருந்து என்ன தெரிகிறது? விவசாயத்தில் இயந்திரப் புரட்சி ஏற்பட்டால், வேலையில்லாத் திண்டாட்டமே அதிகரிக்கும். ஒரு சனியனைத் தொலைக்க, மற்றொரு சைத்தானை இழுத்துக் கட்டிக்கொள்வதும் உண்டோ? அவ்வித உற்பத்தி முறை இந்தியாவிற்குப் பொருந்துமா என்று இனி கவனிப்போம்.

இந்திய விவசாயத்தின் முக்கியமான மூன்று அம்சங்கள்: ஒன்று, நம்நாட்டில் உழைப்பதற்கு மனிதர் அதிகமிருக்கின்றனர். நம்நாடு ஒரு பெரிய மனிதக் கடல்; இரண்டு, தனிப்பட்ட சொத்துரிமையும் இருந்துவருகிறது; மூன்று, இந்தியாவில் 5 ஏக்கராவிற்குக் குறைவாக நிலம் படைத்த சிறு விவசாயிகளே அதிகம்.

இந்நிலைமையில் இயந்திரங்களை நாம் உபயோகிக்க முடியுமா? முடியும். ஆனால், யாரால் முடியும்? பெரிய மிராசுதார்களால் தான் முடியும்? இயந்திரங்களை உபயோகிக்க நிறைய மூலதனம் வேண்டும்; அத்துடன் நிலப்பரப்பும் ஒரு விவசாயிக்கு நிறைய இருக்கவேண்டும். ஐந்து ஏக்கரா நிலத்தில் இயந்திரத்தை இலாபகரமாக உபயோகிக்க முடியாது; ஒரு விவசாயிக்கு 150, 200, 300 ஏக்கரா என்ற அளவில் சாகுபடி நிலம் வேண்டும். அப்படி நிறைய நிலம் படைத்த ஒரு மிராசுதார் இயந்திரங்களில் மோகம் வைத்துவிட்டால் என்ன விபரீத பலன்கள் ஏற்படும் தெரியுமா? அமெரிக்காவில் ஏற்பட்டதுதான் இங்கும் ஏற்படும்.

அவருடைய நிலத்தில் தற்சமயம் 100 பேர், கூலிகளாகவோ, வாரம், குத்தகைக்காரராகவோ வேலை செய்து வருகின்றனர் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த மிராசுதார், தன்னுடைய நிலத்தில் இயந்திரங்களைப் புகுத்தினால், குறைந்தது 70 பேர் நிலத்திலிருந்து துரத்தப்படுவார்கள். ஒருவேளை, மிராசுதாருக்குக்கூட இருதயம் இருக்கலாம்; இரும்புக்கு இருதயம் உண்டோ? இதனால், வேலையில்லாத் திண்டாட்டமே அதிகரிக்கும். இது அநீதி நம்பர்—1.

அத்துடன், மற்றொரு விபரீத பலனும் ஏற்படும். இயந்திரங்களை இலாபகரமாக உபயோகிக்க வேண்டுமென்றால், நிலப்பரப்பு அதிகம்வேண்டும். இயந்திரங்களை உபயோகிக்கும் பணக்கார முதலாளி என்ன நினைப்பார்?" "ஐயோ, நிலத்தில் கொண்டுவந்து இவ்வளவு முதலைப் போட்டுவிட்டேனே! இன்னம் 500 ஏக்கரா சேர்ந்தால்தான் கால் வட்டிக்காவது கட்டும்", என்று ரொம்பக் கவலைப்படுவார். பணக்காரர் கவலைப்பட

ஆரம்பித்தால், அதன் பலன் என்ன ஆகும் என்றுதான் நமக்குத் தெரியுமே! பக்கத்தில் இருக்கும் சிறிய நிலத்துண்டு களெல்லாம் பெரிய பண்ணைக்குக் கை மாறிவிடும். பல சிறிய விவசாயிகள், பெரிய முதலாளியுடன் போட்டி போட முடியாமல், நிலத்தையே அவருக்குவிற்று விட்டு, ஆண்டிகளாய்ப் போய் விடுவர். இப்படி நிலம் பெருவாரியாக சிலர் கையில் போய் குவிந்துவிடும். அதாவது, பெரிய மீன், சிறிய மீனை விழுங்கிவிடும். இந்த விபரீதந்தான் அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கிறது. இரும்பு, இலாபம், பணம் - இவைகளுக்கும், தயை, ஈவு, இரக்கம், இருதயம் - இவைகளுக்கும் ரொம்ப தூரமல்லவா?

ஆக, இவ்விரு விபரீதங்களும் முதலாளித்துவ அமைப்பில் இயந்திர சாதனங்களை உபயோகிப்பதால் நிச்சயம் ஏற்படும். "கோவாபரேடிவ்" பண்ணைகளை ஏற்படுத்தினுல்மட்டும், என்ன வாழ்ந்துவிடப் போகிறது?" "கோவாபரேடிவ்" பண்ணை என்பது கண்ணைத் துடைக்கும் ஜால வேலை. இப்பொழுது வேலை செய்யும் "கோவாபரேடிவ்" சொஸைடிகளும், பாங்குகளும் பணக்காரர் கைகளில் தானே சிக்கிக் கிடக்கின்றன? பணக்கார முதலாளிகளின் ஆதிபத்தியம் இல்லாமலிருந்தால், "கோ-வாபரேடிவ்" பண்ணை என்பது கொக்கின் தலையில் வெண்ணையை வைத்துப் பிடிப்பது என்றுதான் அர்த்தம். ஆனுல், அவ்வித பண்ணைகளில் இயந்திரங்களை உபயோகித்து, உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது உண்மைதான். உற்பத்தி பெருகினுலும், நாம் முந்தி குறிப்பிட்ட விபரீத பலன்களும் நிச்சயம் ஏற்படும்.

ஆனுல் இதற்கு மாருக, ரஷ்யாவில் இருப்பதுபோல் கூட்டுப் பண்ணைகளை ஸ்தாபித்தால், இயந்திர சாதனங்களை உபயோகிப்பதில் இந்த இரு விபரீதங்களும் ஏற்படா. ஏனென்றுல், கூட்டுப் பண்ணைகளில் தனிப்பட்டச் சொத்து உரிமை கிடையாது; அதாவது பொதுவுடைமை அமைப்பு இருக்கின்றது. இந்தியா சுதந்திரமே அடையாமலிருக்கும் போது, நம் நாட்டில் பொதுவுடைமை சமுதாயம் பல வருஷங்களுக்கு ஏற்படப் போவதில்லை என்பது நிச்சயம். முதலாளித்துவ அமைப்பில் இயந்திர சாதனங்களைப் பெருவாரியாக உபயோகிப்பதென்பது பெரிய விபரீதத்தில் நம்மைக் கொண்டுவிடும். தற்சமயம், பணப் பெருக்கத்தால் பணக்காரர் எல்லோரும் இன்னும் கொழுத்து விட்டார்கள் என்பது கண்கூடு; இயந்திர பூதமும் வந்து விட்டால், பணக்காரர் யானைகளாகவே மாறிவிடுவர். "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமோ?" என்று பழமொழி. இப்பொழுது, சிறு விவசாயிகள் (கூலி, வாரம், குத்தகைக்காரர் எல்லோரும்) தூங்கிக்கொண்டே யிருந்துவிட்டால் "லபோ, லபோ" என்று அடித்துக் கொள்ளுவதில் என்ன பிரயோஜனம்? ஆகையால், வருமுன் காப்போம்.

* * *

ஆனுல், முதலாளித்துவ அமைப்பாய் இருந்தாலும் சரி, பொதுவுடைமை சமுதாயமாய் இருந்தாலும் சரி, இயந்திரங்களை உபயோகிப்பதால் மற்றும் ஒரு பெரிய தீங்கு ஏற்படும். அதாவது: இயந்திரங்கள், இந்திய விவசாயத்திற்கு கொஞ்சம்கூட லாயக்கில்லை. ரொம்ப ஆழமாக உழுவது நல்லது என்று சில நிபுணர் நினைக்கின்றனர். அதற்காக இயந்திரங்களை உபயோகிக்க வேண்டுமென்றும் அவர்கள் செப்புகின்றனர். இந்தியாவில் பெருவாரியாக நெல் சாகுபடி செய்யப்படுகிறது; நெல் வயல்களின் பூசாரம் குறையாமலிருக்க நம் விவசாயிகள் ஆழமாக உழாமலிருக்கின்றனர். நம் நாட்டுக் குடியானவன் மடையன் இல்லை. ஆழமாய் உழுதால் ஒன்றிரண்டு வருஷங்களுக்கு நல்ல விளைவு இருக்கும்; ஆனுல், பிறகு? பிறகு, ஒன்றுமில்லை என்பது அவனுக்குத் தெரியும். இதற்கு விவசாய விஞ்ஞான சாஸ்திரப்படி ஒரு முக்கிய காரணமும் உண்டு. அதாவது, பூமியில் இயற்கை அன்னை கண்ணும் கருத்துமாக சேர்த்துவைத்து, சிறிது சிறிதாக ஒவ்வொரு வருஷமும் மேலே

த்துவரும் சில ரசாயன உப்புக்கள் (நைட்ரேட்ஸ் முதலியன), ஆழமாக உழுவதால் மேலே கொண்டு வரப்பட்டு சீக்கிரம் வீணாகிவிடும். இயந்திரங்களை உபயோகித்தால், இப்படி விபரீதமான விளைவு ஏற்படும். "அதனால் என்ன? ரசாயன உரங்கள்தான் பாக்டரிகளில் செய்கிறார்களே. அவைகளைப் போட்டு விட்டால் போகிறது" என்று நீங்கள் சொல்லலாம். இயற்கையில் இருக்கும் பூசாரத்தை அழித்துவிட்டு, செயற்கை உப்புக்கள் போடுவது நல்லதா? ரசாயன உரம் உற்பத்தியை தற்காலத்தில் அதிகரித்தாலும், பூசாரத்தை நாளடைவில் அழித்து விடுவதாகவும், செடிகளில் வியாதிகளை உண்டாக்குவதாகவும், அதனால் அப்பொருள்களைப் புசிக்கும் மனிதர்களுக்கும், மாடுகளுக்கும் வியாதிகள் பல வருவதாகவும், சில விவசாய நிபுணர் கருதுகின்றனர். செடிகளுக்கு வியாதி வந்தவுடன், அதைத் தொலைக்க மருந்துகள், இஞ்செக்ஷன் எல்லாம்! இப்படி அமெரிக்காவில் செய்கின்றனர்! மனிதர்களுக்கு வியாதிவந்தால், தற்காலத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதுதான் நமக்குத் தெரியுமே! உடனே, ஆஸ்பத்திரிக்குக் காவடி எடுக்கிறோம்! "சுக்கு கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்" என்ற மாதிரி இருக்கிறது இது. ஆம்பில் விழுந்து, சேற்றையா பூசிக் கொள்ளுவார்கள்? அப்படி சேறு என்றால்கூட பரவாயில்லை. ஆனால் இயந்திர பூதமும், ரசாயன உரமும் நம் விவசாயத்தில் புகுந்தால், நாம் தற்கொலை செய்து கொள்ளுகிறோம் என்றுதான் ஏற்படும்.

இது நிற்க, மாடுகளையே விவசாயத்தில் உபயோகிப்பதால், அவை வேலை செய்யும் நேரத்தில் போடும் சாணி, பெய்யும் மூத்திரம் சிறிதுகூட வீணாய்ப் போகாமல், நிலத்திற்கு உடனே கிடைத்து விடுகிறது. இயந்திரங்கள் சாணி போடுமா? அவை மூத்திரம் பெய்யுமா? அப்படி அவை செய்தால், போனால் போகிறது என்று இயந்திரங்களை நாம் எதிர்க்கப் போவதில்லை! ஆனால், உண்மையில் அவைகளிலிருந்து சிறிது பெட்ரோல் கசிந்துவரலாம்; அந்தப் பெட்ரோலால் நிலத்திற்கு என்ன பிரயோஜனம்?

ஆகையால், இந்தியாவைப் பற்றிய வரையில் முதலாளித்துவ அமைப்பில் இயந்திரங்கள் பணக்கார முதலாளிகளையே கொழுக்க வைக்கும். பொது உடைமை சமுதாயத்திலும் இயந்திரங்களை உபயோகிப்பது நல்லதல்ல. ஏனென்றால், நிலம்கூட பொது உடைமையைக்கண்டு பயப்படுமா என்ன? சில வருஷங்களில், பூசாரமும் குறைந்து, நிலமும் வெடித்து சாகுபடிக்கு லாயக்கற்றதாகி விடும்; அத்துடன், உற்பத்தியும் ரொம்ப குறைந்துவிடும். எந்த சந்தர்ப்பத்திலும் இயந்திரங்களால் கெடுதலே அதிகம்; பிற்காலத்தில், வங்காளப் பஞ்சத்தைவிடப் பெரிய பஞ்சம் நம் நாட்டைப் பீடிக்கும்.

* * *

அப்படியானால், உற்பத்தியைப் பெருக்க கால் நடை அபிவிருத்தியே முக்கியம். மனிதனுக்கு மாடுதான் இணை பிரியாத தோழன்; அத்தோழனை நன்றாய் கவனித்து வளர்த்தால், விவசாயத்திற்கு நிரந்தரமான நன்மை ஏற்படும். அவனையே நம் விவசாயிகள் எக்காலத்திலும் பரிபூர்ணமாக நம்பவேண்டும்.

"சுவரை வைத்துக்கொண்டு சித்திரம் எழுதவேண்டும்" என்று பழமொழி. விவசாய அபிவிருத்தி என்ற சித்திரத்திற்கு கால் நடை அபிவிருத்தி தான் ஆதாரம். இயந்திரம் என்ற மண் குதிரையை நாம் ஒருபொழுதும் நம்பக் கூடாது. கால்நடை அபிவிருத்தி முன்னை விடப் பன்மடங்கு முக்கியத்துவம் பெற்று இருக்கிறது தற்சமயம். அதைப் பற்றி விரிவாக இனி ஆராயலாம்.

(தொடரும்)

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸோஸைடி
லிமிடெட்

மிக்க முன்னேற்றமடையும் லைப் ஆபீஸ்

இதில் இன்ஷ்யூர் செய்யுங்கள்

1943 டிஸம்பர் 31-ந்தேதி முடிய வருடத்தின்
புதிய பாலிஸிகள் ரூ. 5 கோடிக்கதிகம்

ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி	....ரூ.	**5,39,00,000**
அமுலிலுள்ள மொத்த வியாபாரம்	....ரூ.	**24,82,00,000**

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும் :—

மதராஸ் பிராஞ்சு :

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி,
லிமிடெட்.,

107, அரண்மனைக்காரத் தெரு,

ஜி. டி. மதராஸ்.

அஜீர்ணம்

[திருஷ்ட கர்மா]

அத்தியாயம் 3

காலையில் வைத்தியசாலைக்கு வந்தவுடன் மாந்தமென்று ஒருவர் குழந்தையை எடுத்துக்கொண்டு வந்தார். "ஒரு கலியாணத்திற்கு போய்விட்டு வந்ததும் குழந்தைக்கு எண்ணெய் தேய்த்தோம். மறு நாளைக்கு விளக்கெண்ணெய் கொடுத்தது. அதுதான் சாக்கு என்று வந்துவிட்டது மாந்தம். எண்ணெய் சிக்கிக்கொண்டதோ என்னமோ. திடீரென்று குழந்தை சோர்ந்து விழுந்து மொரல மொரல விழித்தது. கை கால்களெல்லாம் கோணல் கோணலாக இழுத்தது. கண் வெள்ளை விழித்தெறிய ஒரு பக்கமாக சொருகி நிலைத்துவிட்டது. உடம்பு சில்லிட்டு விட்டது. இன்னும் என்ன வேண்டும் வைத்தியரே! கொஞ்சம் மூச்சு வந்துகொண்டிருந்தது. அவசரமாக கைவைத்தியம் எல்லாம் செய்து பார்த்தோம். வேப்பெண்ணையை காய்ச்சி உடம்பெல்லாம் தடவினோம். தவிடு வருத்து ஒத்துடம் கொடுத்தோம். கும்பல் கூடிவிட்டது. குழந்தை பல் கிட்டி படுத்துக்கொண்டிருந்தது. எங்கோ குக்கிராமத்தில் இப்படி எல்லாம் வைத்துக் கொண்டு அவஸ்தைப்பட்டேன் வைத்தியரே. உங்களை நினைச்சுக் கொண்டேன். அந்த ஒருநாள் போகிறது ஒரு யுகம்போலிருந்தது. ஸ்வாமி தான் காப்பாற்றினார்" என்று சொன்னார் கிருஷ்ண பிள்ளை.

சர்மா:—ஏதாவது உள்ளுக்கு மருந்து கொடுத்தீர்களா? கபம் சுளை சுளையாக வாயிலிருந்து எடுத்தீர்களா? மலமும் கழிய ஏற்பாடு செய்தீர்களா? ஜுரம் வந்ததா? எல்லாம் விவரமாக சொல்லுங்கள் பிள்ளைவாள். நம்ம டாக்டர் சுந்தரமும் கேட்கட்டும். நாட்டுபுறத்திலும் யாரோ வைத்தியம் செய்துதான் உங்கள் பையன் பிழைத்தான். அது எப்படி என்றறிய ஆவலாக இருக்கிறார்.

பிள்ளை:—நான் என்னத்தை செய்கிறது! வந்த இடத்திலே இந்த ஆபத்திலே மாட்டிக் கொண்டோமே என்று, திக்பிரமை பிடிச்சவனாட்டம் இருந்தேன். பக்கத்திலே 5 மைல் தூரத்திலேதான் யாரோ வைத்தியன் இருக்கானு கூட்டிவரப் போனார்கள். வைத்தியன் வருவதற்குள்ளேயே ஆச்சு போச்சுன்னு ஆகிவிட்டது.

அங்கே ஒரு கிழவி வந்தாள். அவள் மகராஜி. குழந்தைக்கு உயிரை அவள்தான் கொடுத்தாள் என்று சொல்ல வேண்டும். மூக்கில் விரலை வைத்துப் பார்த்தாள். மூச்சு லேசாக வந்து கொண்டிருந்தது. உடம்பெல்லாம் சில்லிட்டு பல்கிட்டி இருந்தும் மூச்சுமட்டும் சிறிது உஷ்ணமாகவே இருந்தது. உடனே அந்தம்மாள் இஞ்சியையரைத்து சார்பிழிந்து அதில் கொஞ்சம் தேனைக் கலந்து பாலடையில் எடுத்துக் கொண்டாள். பிறகு பல்லை நீக்கி பாலடையை கடைவாயில் கொடுத்து அந்த சார் பூராவையும் செலுத்திவிட்டாள். கொஞ்சம் நிமிஷங்களில் வாயிலிருந்து கம்பியாட்டம் கபம் வழிந்தது. பல்லை கிடிக்கி கொடுத்து நீக்கிக்கொண்டு இக்கபத்தை சுருட்டி சுருட்டி தொண்டையிலிருந்து எடுத்துப் போட்டாள். எங்கிருந்துதான் அவ்வளவு கபமும் வந்ததோ. எல்லாம் சேர்ந்து ஒரு கை நிறைந்துவிடும்போலிருந்தது. மறுபடியும் ஸ்வரசத்தை முன்போலவே போட்டினாள். இந்த தடவை சட்டென்று வாந்தியே வந்தது. புளித்தவாடையுடன் மாக் கரைத்தார் போல முந்திய நாள் சாப்பிட்ட வாழைப்பழம் கடலை முதலிய எல்லாம் அப்படியே வெளியே வந்துவிட்டது. இதைப் பார்த்தவுடன் அந்தம்மாள் இனி பயு

மில்லை, மந்தம் நீங்கிவிட்டது" என்று சொல்லி குழந்தையை முகம் துடைத்து திருநீரை இட்டு ஆசீர்வாதம் செய்தாள். பிறகு சுக்கு கிஷாயம் போடச் செய்து அதில் கருப்பாக 2 மாத்திரைகளை இழைத்து குழந்தைக்கு போட்டினாள். இனி குழந்தை பிழைத்துக் கொள்ளும் என்று சொன்னாள். அவள் தெய்வம் போல் சமயத்திற்கு வந்து உதவினாள்.

சர்மா: வைத்தியருக்குச் சொல்லி யனுப்பினீரே. அவர் வரவில்லையா?

பிள்ளை: சொல்லி யனுப்பினேன். ஆள்தான் திரும்பிவந்தான். நமக்கு முன்னே யாரோ எட்டு மைல் தூரத்தி லுள்ள கிராமத்திற்கு அழைத்துப் போனாராம். வந்ததும் வரச் சொல்லுவ தாகச் சொன்னார்கள். நான் இரண்டு நாட்கள் தாமதித்தும் அவர் வர வில்லை. கொஞ்சம் சரியாகப் போன தும் வந்துவிட்டேன். உங்கள் கையில் ஒப்படைத்துவிட்டால் கவலை உங்க ளுடையது என்று வந்துவிட்டேன்.

சர்மா: அப்பொழுது அந்த இரண்டு நாட்களும் என்ன செய்தீர்கள்?

பிள்ளை: முதல்நாள் நீங்கள் சொன்னப் படியே மலப்ரவ்ருத்தியு மாச்சு; நல்ல ஜுரமும் வந்துவிட்டது. நெருப்பாட்ட மிருந்தது. கை வைக்க முடியவில்லை. ஆனாலந்தம்மா, "ஒன்றும் பயப்படவேண் டாம். இப்படித்தான் ஜுரம் வந்து தணிந்துவிடும்" என்று சொன்னாள். ஆகாரம்மட்டும் புழுங்கலரிசி புனப்பாகத் தண்ணீர் கொஞ்சம் சுக்குதட்டிப் போட் டுக் கொடுத்தோம். இரண்டு வேளையும் இஞ்சிசாற்றையும் தேனையும் சஞ்சீவி யாட்டமே கொடுத்தோம். கொஞ்சம் ஜ்வரம் தணிந்தது; எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். பாருங்கள். குழந்தைக்கு இன்னும் என்ன செய்யலாமென்று. நீங்கள் சொன்னாலொழிய தலைக்கு ஜலம் விடப்போகிறதில்லை.

சர்மா குழந்தையைப் பார்த்தார். நாக்கில் மப்புக்கறி குறியான வெண் மையும் மாவுப் படிந்தார் போன்ற அழுக்கும் இல்லை. வயிற்றை விரல் களால் தட்டிப் பார்த்தார். சப்தம் நன் றாகவே இருந்தது. வயறும் கைக்கு நன்றாக அமுங்கிக் கொடுத்தது.

"பிள்ளைவாள், பையனுக்கு உடம்பு நன்றாக ஆகிவிட்டது. இனிமேல் கண்ட தைச் சாப்பிடாமல் பார்த்துக் கொள் ளுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக குழைய வடித்தச் சாதத்தை மிளகு ரசத் துடன் சேர்த்துக் கொடுங்கள். நன்றாகச் சாப்பிட்டு ஜீரணம் ஆகிவந்தால் இன்னும் 2 நாட்கள் கழித்து நல்லெண்ணெய்யில் கொம்பரக்கு, மஞ்சள், கோஷ்டம், சித்த ரத்தை, மருள், தேவதாரு, சந்தனம், கோரைக் கிழங்கு முதலியவைகளைக் கிடைத்த வரையிலும் இடித்து அரைத்துப் போட்டுக் காய்ச்சி தைலப் பக்குவமாக வடித்து ஸ்னானத் திற்கு உபயோகப்படுத்துங்கள். அடிக் கடி அஜீர்ணம் ஏற்படாமலிருக்க இந்த சூர்ணத்தை வெண்ணீரில் கலக்கி போட் டிக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லி வைஸ்வா நரசூர்ணத்தை யள வுடன் பொட்டணங் கட்டிக் கொடுத்த னுப்பினார்.

பிள்ளை வந்தனம் கூறி சூர்ணத்தை வாங்கிக்கொண்டு சென்றார்.

சர்மா சுந்தரத்தைப்பார்த்து "எப்படி வைத்தியம்?" என்றார்.

டாக்சு: எனக்கு என்னச் சொல்லு கிறது என்று புரியவில்லை. எல்லாம் ஆச் சரியமாக இருக்கிறது. பாமர ஜனங்கள் கூட நாட்டுபுறத்தில் இவ்வளவு சுலப மாக வைத்தியம் செய்துவிடுகிறார்களே! இயற்கையின் நியதி வைத்தியன் சுலபத் தில் கிடைக்கக்கூடாத இடங்களில் வைத் தியம் சுலபத்தில் அமைந்திருக்கிறது. இந்த முறைகளை எல்லாம் பால்யம் முதல் ஒவ்வொருவரும் அனுபவத்தில் அறிந்து வந்திருக்கிறார்கள்.

சர்மா: ஆம். ஆயுள் வேதம் உடன் பிறந்தே வந்திருக்கிறது நம்நாட்டில். எல்லோருக்கும் வாத, பித்த கபங்கள் சகஜமான பதங்களாகப்படுகின்றன. அவ சரத்தில் ஆபத்திற்குதவும் முறைகளை வைத்தியர்களின் ஏகபோக உரிமை யாக ஆக்காமல் சகலரும் அறியும்படி

நம் முன்னோர்கள் செய்துவைத்த பயிற்சியின் பலன். வரவர சிரத்தைக் குறைவினால் இந்த அம்சம் மங்குகிறது. சுந்தரம், உன் போன்றவர்கள் கையில்தானிருக்கிறது இந்த கலையின் ஜீவன்.

டாக்சு: என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்! ஆங்கில வைத்தியம் கொண்டு இவர்கள் எல்லோரும் சுலபத்தில் வைத்தியம் செய்துக்கொள்ளும்படி எவ்வாறு நாங்கள் பழக்கமுடியும்?

சர்மா: அப்படி யில்லை. புது மோகம் படைத்து இச்சனங்கள் பழமையான உண்மைகளெல்லாம் தவறுதல்களென்றே கொண்டு அவைகளை துறந்துவிடுகிறார்கள். ஆகவே உண்மை கலையுணர்ச்சிக்கொண்ட நீங்கள் ஆயுர்வேதத்தின் தத்துவங்களை யறிந்து ஆயுர்வேதமே பெருகிப் பெருகி நவீன வைத்யத்தைத் தன்னுளடக்கும் சக்தி வாய்ந்தது என்பதை ஓர்ந்து நம்ப்ராசீன முறைகளையும் கைக்கொண்டால் ஜனங்களும் உங்களைப் பின்பற்றி பழமையான அனுபவங்களை இழக்காமல் கடைத்தேறுவார்கள். என் போன்றவர்கள் உங்கள் சாத்திர உண்மையை ஆராய்ந்து ஆயுர்வேதத்திற்கு முரண்பாடு இல்லாத வகையில் ஆங்கில ஔடதங்களையும் உபகரணங்களையும் கைக்கொண்டால், இப்பொழுது ஜனங்களுக்கிருக்கும் நவீன மோகத்தில் எங்களைச் சரியாக அறியமாட்டார்கள். நாங்களும் ஆயுர்வேதத்தில் நம்பிக்கை இழந்து நவீன வைத்தியத்தில் சரணாகதி யடைந்துவிட்ட தாகவேக் கொள்ளுவார்கள். இது இயற்கை. ஆகவே சாஸ்திர உண்மைகள் நம் ஜனங்களுக்குப் பெரும்பயனளிக்கும் வகையில் காக்கப்பட வேண்டுமென்றால், நீங்கள்தான் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயுர்வேதத்தி லார்வம் ஆங்கில வைத்தியர்கள் ஆயுர்வேதத்தைக் கடைபிடிக்கும்படி தூண்டப்படுவதால் தான் ஏற்படும். இத்தூண்டுதல்கள், இரண்டு வைத்தியங்களையும் பயின்றும் ஆயுர்வேத வைத்தியனென்றே மதிக்கப்படும் எல். ஐ. எம்.கள் தீவிரமாக முனைந்து சாஸ்திரவிசாரமும் சித்தாந்தமும் செய்ய முன்வது ஆங்கில வைத்தியர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்து காட்ட வந்தால் தானே யமையும்.

டாக்சு: சர்மா? நீர் தேர்ந்த தேசசேவகர். மெச்சுகிறேன் உங்கள் வாக்கு சாதுர்யத்தையும் புத்தியின் கூர்மையையும். தயவுசெய்து இந்த மாந்தம் எவ்வாறு ஏற்படுகிறது என்றும் அதன் சிகித்சையின் தத்துவம் எவைகள் என்றும்விளக்குங்கள்.

சர்மா: ஒன்றும் பிரமாதமில்லை. மந்தம் என்றால் குறைவு என்று அர்த்தம். அக்கினியாகிற ஜீர்ணத்தைச் செய்யும் பொருள் தன் சக்தியை இழந்து குறைவுற்றால் மந்தமேற்படுகிறது. இதன் விளைவாக ஏற்பட்ட வ்யாதி மாந்தமெனப்படும். இதனால் ஆகாரமும் ஜீர்ணமாகிறதில்லை. ரஸமும் கெட்டு ஆம தோஷமும் ஏற்படுகிறது. ஆமாசயத்திலும் குடலிலும் இந்த பக்குவமாகாத ஆகாரமும், மலமும் தங்கி விடுகிறது. ரஸத்தின் ஸ்தானமாகிய ஹ்ருதயத்தைப் பிரவேசித்த தோஷம் சம்க்ஞாநாசத்தை ஏற்படுத்தி கனே எனப்படும் மாந்தத்தை உண்டாக்குகிறது. அப்பொழுது கப தோஷம் பிரதானமாகப்பெருகி இடைஞ்சலை உண்டாக்குகிறது. அதனால்தான் தீக்ஷ்ணமான கபத்தையறுக்கும் இஞ்சிச் சாற்றைக் கொடுத்ததில் கபம் வெளிப்பட்டு ஆமாசயத்திலுள்ள தோஷம் விலகவே சம்க்ஞை திரும்புகிறது. உடனே உடம்பில் சூடு ஏறுகிறது. தீவ்ர ஜ்வர மடிக்கிறது. மலப்ரவ்ருத்தியும் ஆக உதவியது. சீரகம் கலந்த ஏதோ ஒரு மாத்திரையை வாத சமனமான சுக்குக் கஷாயத்தில் கொடுக்கவே மற்றைய குடலிலுள்ள தோஷமும் விலகினது. இது அலசகத்தைப் போன்றேயுள்ள வியாதி இல்லையா! வாந்தியும் பேதியும் ஆனவுடன் தணிந்து விட்டது. இங்கு தோஷங்கள் இன்னும் சாகைகளுக்குப் போகாததனால் இவ்வளவு சுலபத்தில் வைத்தியம் முடிகிறது.

டாக்: சாகைகளென்றால் விவரமாகத் தெரிய வேண்டுமே.

சர்மா : ஆம். ஆனால் இன்னும் பல விஷயங்கள் தெரிய வேண்டும். அடுத்த சமயம் வியாதிகளைக் கிளராமல் த்ரி தோஷங்கள், சாதை, சந்தி, கோஷ்டம் முதலியவைகளும் அங்குள்ள தோஷங்களைப் போக்கும்வழி முதலியவைகளையும் ஆராயலாம். அதற்குள் இந்த அஜீர்ணமே எவ்வளவு வகையில் வியாதிகளைத் தோற்றுவிக்கிறது என்று புனராலோசனை செய்யுபார்.

டாக் : அப்படியே. மிக்க வந்தனம்.

வைச்வாநர சூர்ணம்

குறிப்பு :—இந்துப்பு ஒரு பங்கு, ஓமம் 2 பங்கு, ஜீரகம் 3 பங்கு, அரிசி திப்பிலி 4 பங்கு, சுக்கு 5 பங்கு, கடுக்காய்த் தோல் 15 பங்கு. இவைகளை இடித்துச் சூர்ணம் செய்து ஒரு சிட்டிகை முதல் 6 சிட்டிகை வரையில் சாப்பிட்டு வென்னீர் சாப்பிட்டு வந்தால் நல்ல அக்னி விருத்தியாகும்.

அரை தோலா முதல் ஒரு தோலா வரையில் படுக்கும்பொழுது சாப்பிட்டு வென்னீர் குடித்து வந்தால் வலசுத்தியும் நன்றாக ஏற்பட்டு ஆரோக்யத்தை அளிக்கும்.

(தொடரும்)



புதுப் புத்தகங்கள்

உதயம்

[சிந்தாமணி பப்ளிகேஷன்ஸ்,ராஜவீதி, கோயமுத்தூர்.]

'மாதம் ஒரு புத்தகம்' என்ற கூட்டத்தில் இதுவும் ஒன்று என நினைக்கிறோம். இப்புத்தகம் கதை, கட்டுரை, கவிதை இவைகளுடன் விளங்குகிறது. தடி அட்டைமீது கிராம்யமான சித்திரம் தமிழ் வளர்ச்சிக்கு இப்பிரசுராலயத்தாரும் தங்களாலான கைங்கர்யம் செய்ய முன் வந்திருப்பது பாராட்டத் தக்கதே.

வரபெற்றோம்

(1) பச்சைக்கிளி, கு. சந்திரசேகரன். கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். ரூ. 2-0-0

(2) மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள். தருமபுர ஆதீனம், தருமபுரம் ரூ. 1-0-0

(3) சிவஞானப்போதக் கட்டுரை, தருமபுர ஆதீனம், தருமபுரம். ரூ. 0-8-0

(4) Warning to the west by Shridharani; International book house Ltd., Bombay. Rs. 4-14-0.

(5) Bnsiness and Business men by C. M. Sreenivasan, 10, Mount Rd. Madras. Rs. 2-0-0.

(6) ஆண்டாள், அல்லயன்ஸ் பிரசுரம் மயிலாப்பூர். ரூ. 1-4-0.

(7) அபிராமி அந்தாதி, திருப்பனந்தாள், காசி மடத்து வெளியீடு.

(8) ஸ்ரீலஸ்ரீ காசி சாமிநாதஸ்வாமிகள் வரலாறும், கந்தர் கலிவெண்பா முதலியனவும், காசிமடம், திருப்பனந்தாள்.

(9) ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள், டாக்டர் உ. வே. ஸ்வாமிநாதையர். ரூ. 4-0-0.

இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"

வடக்கு பீச் ரோடு : : மதராஸ்

*

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி	மவுண்டு ரோடு
மயிலாப்பூர்	தியாகராய நகர்	புரசவாக்கம்

*

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிரான்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (30-6-44-ல்)	ரூ. 33,32,951
ரிஸர்வ் நிதி	ரூ. 32,00,000
டிபாஸிட்டுகள் (30-6-44-ல்)	ரூ. 9,48,49,465

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விவரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்
காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்,
செக்ரடரி.

நாகர்கோயில்

['சூடாமணி']

குதித்துக் குதித்துக் குதித்தாடு, பாம்பே ! - நாகர்
கோவிலைக் கண்டு குதித்தாடு, பாம்பே !
ஆடு பாம்பே ! குதித்தாடு பாம்பே ! - கண்ணன்
அடியிணை கண்டோமென் றாடு பாம்பே !

பண்டுமுதல் பாரி லெங்கும் வாழ்ந்தவர்தாம்
பாழும்விஷப் பாம்பை அஞ்சிக் கோயில்கட்டிக்
கண்டுதொழு மரபினைக் காட்டி விளக்கும்
காட்சிநாகர் கோவி லென்று ஆடுபாம்பே !

நாகந்தனைத் தான்வளர்த்த நாகர் கோவில்,
நஞ்சைக் காட்டில் நட்டுவைத்த நாகர்கோவில்
நாகத்தணையான் மேவுகின்ற நாகர்கோவில்,
நாடுகூடி வந்துதொழும் நாகர்கோவில்.

நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பை,
நாரணற்குப் பாயலான நல்ல பாம்பை,
பாதலத்தில் மண்சுமக்கும் பைகொள் பாம்பை,
பண்பாய் எண்ணக் கட்டிவைத்த நாகர்கோவில்.

நாகரது நாகரிகம் நாடி நின்ற
நாளிலிந்த நாட்டினிலே நாகர் கோவில்
நாகரசின் கோவிலென் றாடாய் பாம்பே !
நாரணன்தன் கோவிலென் றாடாய் பாம்பே !

சென்ற பத்து ஆண்டுகளாக யுனைடெட் இந்தியாவின் உன்னத வளர்ச்சி

	1933	1943	அதிகம்
பிரீமிய வருமானம்	11.45 லக்ஷம்	38.21 லக்ஷம்	334%
மொத்த ஆஸ்தி	59.92 லக்ஷம்	203.92 லக்ஷம்	340%
அமுலிலுள்ள அஷ்யூரன்ஸ்கள்	2.41 கோடி	8.05 கோடி	334%

●

யுனைடெட் இந்தியா லைப்

அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்பிளனேட் :: மதராஸ்.

டிரஸ்டி மதராஸ் அபீஷியல் டிரஸ்டி

இந்தியாவெங்கும் பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் உண்டு.

●

தென்னிந்தியாவில் பிராஞ்சு ஆபீஸ்கள்

பெங்களூர், பெல்லாரி, கள்ளிக்கோட்டை, காக்கினாடா, கோயமுத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருவனந்தபுரம், வெல்லூர்.

இரண்டு கலைப் பெருமாள்

[பி. ஸ்ரீ.]

திருமங்கை யாழ்வார் இயற்றிய பிரபந்தங்களில் பெரிய திருமடல் சிறிய திருமடல் என்ற இரண்டும் திருநறையூர் என்ற திருப்பதியில் கோயில்கொண்டிருக்கும் பெருமாள் விஷயமாகப் பாடப் பெற்றன. இந்த இரண்டு பிரபந்தங்களையும் சேர்த்து மடல் என்ற பொதுவான பெயரால் குறிப்பிடுவதுண்டு. இந்தப் பிரபந்தங்களைத் திருமங்கை யாழ்வார், ஸ்ரீரங்கநாதருக்கு மதில் முதலான பணிகள் செய்து முடித்தபின் ஒருநாள், இன்னிசையோடு சன்னிதியில் பாடிக் கொண்டிருந்தாராம். அப்போது அந்த ஸ்ரீரங்கத்துப் பெருமாளுக்கே கொஞ்சம் பொறாமை உண்டாகி விட்டதாம், திருநறையூருக்கு வந்த அதிர்ஷ்டத்தைக் குறித்து ஸ்ரீரங்கநாதன் தம் மௌனவாய் திறந்து, "மதிலை அங்கே கட்டி மடலை இங்கே கட்டலாகாதா?" என்று சொன்னாராம்.

இதனால் பாடல் - தொண்டு மற்றத் தொண்டுகளைக் காட்டிலும் மேலானதென்று தெரிகிறது. இந்தக் கதை அந்தக் காலத்துப் பக்தர்களின் ரஸிகத் தன்மையையும் கவிதா தாகத்தையும் ஒருவாறு வெளியிடுகிறது.

பாட்டைப்போல் சுலபன்

திருமங்கை யாழ்வார் திருநெடுந் தாண்டகம் என்னும் தமது பிரபந்தத்தையும் ஸ்ரீரங்கநாதருடைய சன்னிதியில் மனம் உருகி உருகித் தேவகானமாகப் பாடுவதுண்டென்று "குரு பரம்பரை"க் கதைகள் தெரிவிக்கின்றன. தமது பாடல்கள் "பண் நிறைந்த இன்பப் பாடல்கள்" என்றும், "நல்ல இன்னிசையால் சொன்ன" இவற்றைத் தொண்டர்களும் இன்னிசையால் பாடிக்கொண்டே ஆடிப் பாவச் சுமைகளையும் துயரச் சுமைகளையும் தள்ளி விட்டு இன்பமடைவார்களென்றும், திருமங்கை யாழ்வாரே சொல்லுகிறார்.

குலசேகர ராழ்வாரும் தமது பாடல்கள் இன்னிசையோடு பிறந்ததாகக் குறிப்பிடுகிறார். இவற்றையும் பக்தர்கள் கானம் செய்துகொண்டே அபிநயித்து ஆடுவார்கள். இப்படிப் பாடி ஆடுவது ஈச்வரனுக்கு உகப்பு என்பது அவர்கள் கருத்து.

பாட்டை ஈச்வரன் ரஸிக்கிறான் என்பது மட்டுமன்று; ஈச்வரனே பாட்டாக வருகிறான் என்ற அபிப்பிராயமும் பக்தர்களுக்குண்டு. திருமங்கை யாழ்வார். "தமிழோசை வடசொல்லாகி" என்றும் "இன்பப் பாவினை" என்றும் பகவானை வர்ணிக்கிறார். பகவானைக் குலசேகரரும் "அந்தமிழின் இன்பப் பாவினை, அவ்வடமொழியை" என்று வர்ணிக்கிறார். "பாட்டைப்போல் பரம சுலபமாகவும் அழகாகவும் இன்பமாகவும் இருக்கிறான் பகவான்". இந்தக் கொள்கை எவ்வளவு வசீகரமானது! இக் கொள்கையில், கவிதைக்கு எவ்வளவு உன்னதமான ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது!

திருமங்கை மன்னரைப்போல் குலசேகரரும், தமிழிலும் வடமொழியிலும் ஒருங்கே பற்றுள்ளவர், புலமையுள்ளவர். ஸாரமான பக்தி மதக் கொள்கைகளிலும் இருவருக்கும் ஒப்புண்டு. திருமங்கை மன்னர் வெளியிடும் பொருளையன்றி, அவர் சொல்லையும் பொன் போலப் போற்றுகிறார் குலசேகரர். உதாரணமாக,

> கண்டவர்தம் மனம் வழங்கும்
> கணபுரத்தென் கருமணியே!

என்ற இவ்வாக்கு, "கண்டவர்தம் மனம் வழங்கும் கண்ணபுரத்து அம்மானை" என்ற திருமங்கை யாழ்வார் வாக்கை ஞாபகப்படுத்துகிறதல்லவா?

ராம பக்தி

திருமங்கை யாழ்வாருக்கும் ராம பக்தியுண்டு; குலசேகரரோ அதில் தம்மை முழுக்க முழுக்க இழந்துவிட்டாரென்று சொல்ல வேண்டும். வேடனையும் பிறையும் சகோதரராக்கிக் கொண்ட ராமனுடைய தியாக வாழ்க்கை திருமங்கை மன்னரை வசீகரித்தது. குலசேகரரையோ குழந்தை - ராமனும் வசீகரித்தான்; வீர ராமனும் வசீகரித்தான்; தியாகமூர்த்தியான ராமனும் வசீகரித்தான்; அந்தச் சரித்திரம் முழுவதும் அந்த உள்ளத்தை வசீகரித்ததென்று சொல்ல வேண்டும். "தெய்வம் அல்லவா ராமன்?" என்ற பயம் திருமங்கை யாழ்வாருக்கும் கிடையாது. குலசேகராழ்வாரோ ராமனை "எங்கள் குலத்து இன்னமுது" என்கிறார்.

அவனுடைய இன்பமும் துன்பமும் தமக்கே இன்ப துன்பங்கள்!

குலசேகராழ்வார்,

அங்கண்நெடு மதிள்புடைசூழ்
அயோத்தி என்னும்
அணிநகரத்(து), உலகனைத்தும்
விளக்கும் சோதி,
வெங்கதிரோன் குலத்துக்(கு)ஓர்
விளக்காய்த் தோன்றி,
விண்முழுதும் உயக்கொண்ட
வீரன் தன்னைச்,
செங்கண்நெடுங் கருமுகிலை,
இராமன் தன்னைத்.
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடம் தன்னுள்
எங்கள்தனி முதல்வனை,எம்
பெருமான் தன்னை,
என்றுகொலோ, கண்குளிரக்
காணும் நாளே?

என்று சிதம்பரத்திலும் ராமனைத் தரிசிக்க விரும்புகிறார். இவர் போன ஸ்தலங்களிலெல்லாம் ராமனையே கண் குளிரக் கண்டாரென்று கருதலாம். இன்னும், ராம கதையைக் கேட்கும் போதும், அந்த வீரன், அழகன் இவருக்குப் பிரத்தியக்ஷமாவான்!

கிருஷ்ண பக்தி

திருமங்கை யாழ்வாரைப்போல் குலசேகரருக்கும் கிருஷ்ண பக்தியுண்டு. இவருக்குக் கிருஷ்ணனும் ராமன்தான்! காதல் - துறையில் பக்தியை வெளியிடுவதற்குச் சௌகரியமாகக் கிருஷ்ணனைப் பாடி யிருக்கிறார்.

இதோ பாருங்கள், கிருஷ்ணனைக் கண்டதும் கோபித்துப் பேசும் ஒரு கோபிகையை! "எனக்குத்தான் கிருஷ்ணா! உன்மேல் ஆசையில்லையே! நீ தானே முதல் முதல் வந்து. 'உன்னைத் தவிர வேறொருவரை நான் அறியேனே?' என்று தாழ்ந்து சொல்லி, 'யமுனை யாற்றங் கரையில் அந்தப் பெரிய மணற் குன்றிலே போய் நில்லு; நான் வருகிறேன்' என்றாய்: சொன்னபடி வந்தாயா?" என்று கேட்கிறாள்:

கூர்மழை போல்பனிக் கூதல் எய்திக்
கூசி நடுங்கி, யமுனை யாற்றில்
வார்மணற் குன்றில், புலரநின்றேன்
வாசுதே வா! உன் வரவு பார்த்தே!

என்று அவனுக்காகத் தான் பட்ட கஷ்டத்தைக் கோபத்தோடு வெளியிடுகிறாள்.

மழை பெய்வதுபோலப் பனி கொட்டிக் கொண்டிருந்ததாம். அந்தக் குளிரால் நடுங்கியதோடு, "யார் பார்த்துவிடுகிறாரோ?" என்று கூசிக் கூசி நின்றுகொண்டே யிருந்தாளாம், விடியுமளவும், கிருஷ்ணனுடைய வரவு பார்த்து.

அதோ வேறொரு கோப ஸ்திரீ தோழியுந் தானுமா யிருக்கிறாள்.

செய்ய உடையும் திருமுகமும்
செங்கனி வாயும் குழலும்கண்டு,

மலைகள்போலப் பொங்கிய உணர்ச்சிகளை எப்படியோ அடக்கிக்கொண்டு, "நீ முன்னே ஏமாற்றிய பழைய ஆசாமிகள் தானே" என்று இப்போது எங்களை நினைத்துவிட வேண்டாம்: நீ உகக்கும் புதிய அழகிகளுமில்லை இங்கே!" என்று பிணங்கி முகத்தை மாறவைத்துப் பேசுகிறாள். "இனி நீ இந்த வாசற்படியை

மிதிக்கவேண்டாம்!" என்று காதலனைக் கண்டிப்பாக எச்சரித்தும் விடுகிறாள்.

இன்னும் ஒரு காட்சி. கிருஷ்ணன் புல்லாங்குழல் ஊதிக்கொண்டு வருகிறான். சில கோபிகைகள் இசை யின்பத்தைப் பருகிக்கொண்டே அவனோடு வருகிறார்கள். அந்த ரஸிக மணிகளைக் கண்டதும், அந்த இசையோடு இசையாகக் கலந்துவிட்டன, ஓர் அபூர்வமான குழைவு—எல்லையற்ற இரக்கம்,—அந்த முகங்களுக்காகவே பூத்து வாடிக்கொண்டிருப்பது போன்ற ஒரு தெய்விக அன்பு! "ஆ, அவர்களுக்காக அல்லவா இவ்வளவு மோகனமாக ஊதி வருகிறான் இந்த மோகன கோபாலன்!" என்று கருதும் வேறு சில ரஸிக மணிகள் என்ன பாடுபடுகிறார்கள், பாருங்கள்!

அந்த வேணுகோபாலனைப் பார்த்து என்ன சொல்லுகிறார்கள், கேளுங்கள்!

மங்கல நல்வன மாலை மார்வில்
இலங்க, மயில்தழைப் பீலிசூடிப்,
பொங்கிள ஆடை அரையில் சாத்திப்,
பூங்கொத்துக் காதில் புணரப்பெய்து,
கொங்கு நறுங்குழ லார்களோடு,
குழைந்து குழல்இனி(து) ஊதிவந்தாய்!
எங்களுக் கேஒரு நாள்வந்(து) ஊத,
உன்குழல் இன்னிசை போத ராதே!

என்று பேசும் இதயங்களின் ஆழத்திலே, காதல் கடல்போலக் குமுறிக்கொண்டிருக்க வேணுமல்லவா?

சரி: மார்பிலே மங்களமான அந்த மாலையும், முடியிலே மயிலிறகும், அரையிலே அந்த மெல்லிய பீதாம்பரமும், காதிலே பூங்கொத்தும், வாயிலே புல்லாங்குழலும், சுற்றிலும் அந்தக் கட்டழகிகளின் சோபையும், கிருஷ்ணனை அலங்கரிக்கின்றனவா? அல்லது அவர்களோடு அப்படிக் குழைந்து ஊதிவரும் அழகன் தான் அந்த அலங்காரங்களுக்கும் அலங்காரமாயிருக்கிறானா?

"அவனே அந்தச் சேர்த்தியின் உயிர்!" என்று தீர்மானிக்கும் பெண் மணிகளைத் தான் அந்த அழகு எப்படியெல்லாம் ஹிம்ஸிக்கிறது! அந்த ஹிம்ஸையில் அந்தப் புல்லாங்குழலின் கீதத்தைக்கூட அனுபவிக்க முடியவில்லை. "எங்களுக்காக மாத்திரம் ஒரு நாள் ஊத வரலாகாதா?" என்று ஆசைப்படுகிறார்கள். "நீ வந்து ஊதினாலும், இந்தக் குழலிலிருந்து இசை புறப்படமாட்டாதோ? கிருஷ்ணா, இதன் சுபாவமும் அப்படித்தானோ?" என்று சொல்லும் மனநிலை, காதலர் உலகத்தை எவ்வளவு நன்றாகக் காட்டுகிறது!

கிருஷ்ணனைக் காதலனாகப் பாடுவது போல், குழந்தையாகவும் பாடுகிறார் குலசேகரர், திருமங்கையாழ்வாரைப் பின்பற்றி.

ஆழ்கடல்சூழ் வையகத்தார்
ஏசப்போய், ஆய்ப்பாடித்
தாழ்குழலார் வைத்த
தயிருண்டான், காணேடி!

என்று ஒருத்தி தாழ்வு சொல்லி விளையாட மற்றொருத்தி விடையாக அவனுடைய மேன்மையைச் சொல்ல விரும்பி,

தாழ்குழலார்வைத்த தயிருண்ட
பொன்வயி(று), இவ்
ஏழுலகும்உண்டும் இடம்
உடைத்தால்! சாழலே.

என்று விளையாடும் துறையில் திருமங்கையார் கிருஷ்ணன் என்ற குழந்தைக் கடவுளை எவ்வளவு அழகாக வருணித்திருக்கிறார்! எனினும் தேவகியின் மனோலோகத்தில் பிரவேசித்து அந்தத் தாயின் மனோபாவத்தோடு அவள் இழந்திருந்த குழந்தைச் செல்வத்தை வர்ணிக்கும் குலசேகரர் பாடல்கள், திருமங்கை மன்னர் பாடல்களைக் காட்டிலும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை. இவற்றில் நடையும் பாவமும் உருகிக் கலந்து இசை மயமான கவிச் சித்திரங்களாகின்றன. இந்தச் சித்திரங்களுக்கு இசை அல்லது கவிதா நாதம் அழியாத உயிரும் வாடாத அழகும் மங்காத ஒளியும் தருகின்றன.

உள்ளம் உருகிப் பாட்டாகிறது

"உருகி வழிந்து புறப்பட்ட சொல்" என்று பக்தர்களின் தோத்திரங்களைப் பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடுகிறார்.

இது குலசேகரரின் பல பாடல்களுக்கும் பொருந்துவதாகும். வித்துவக் கோட்டிலும் திருப்பதியிலும் இவருள்ளம் அப்படியே உருகிப் பாட்டாகப் புறப்படுகிறது. வித்துவக் கோட்டிலே இந்த உள்ளம், விவகார உலகத்திலிருந்து ஒரு புதிய அகண்டமான உலகத்திற்குப் பாய்ந்து போகப் பார்க்கிறது! துயரத்தில் ஆழ்ந்திருந்த போதிலும், தெய்வம் என்ற அகண்ட வஸ்துவையே அடிநாதமாகக் கொண்டிருக்கிறது. (இந்தத் துயரம் சிதம்பரத்தில்தான் விடைகொண்டது: அப்பால் ஸ்ரீரங்கம் இவரை அழைத்துக்கொண்டது.)

மலையாள ராஜ்யத்தை விட்டுத் திருப்பதி மலையை அடைந்ததும், உணர்வு இன்பதுன்பங்களைக் கடந்து காட்டாறுகப் பெருகுகிறது. இந்த நிலையை,

வானாளும் மாமதிபோல்
வெண்குடைக்கீழ், மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து
கொண்டாடும் செல்வறியேன்;
தேனார்பூஞ் சோலைத்
திருவேங்கட மலைமேல்,
கானாறாய்ப் பாயும்
கருத்துடையேன் ஆவேனே!

என்று வெளியிடும் பாட்டின் மனோபாவம் ரஸிகருள்ளத்திற்கும், கவிதா நாதம் ரஸிகர் செவிக்கும், அமுதமாகின்றன.

நட்சத்திர ராஜாக்களெல்லாம் சேவித்திருக்க, வானப் பரப்பை யெல்லாம் ஆட்சி செய்யும் பூர்ண சந்திரன் எப்படி விளங்குகிறானோ, அப்படி விளங்குகிறானும், ஒரு குடைக்கீழ் உலகமெல்லாம் ஒதுங்கும்படி ராஜராஜனாய் வீற்றிருப்பவனும். அப்பேர்ப்பட்ட செல்வத்தையும் துறக்கும்படி தூண்டுகிறது இவர் பக்தியுள்ளம்.

கவியுள்ளமோ, இந்த மலைமேல் பூஞ்சோலைகளுக்கிடையே ஒரு காட்டாறாகப் பாய்வது, செல்வங்களுக்கெல்லாம் மேலான செல்வமென்று சொல்லுகிறது.

இப்படி ஒரு பாட்டை நாம் திருமங்கை மன்னரிடம் எதிர்பார்க்க முடியுமா?

ஸ்ரீரங்கத்தைக் குறித்து இந்த இரண்டு ராஜரிஷிகளும் பாடியிருக்கும் பாடல்களை ஒப்பிட்டுப் பார்த்தாலும், குலசேகரருடைய கவித்வசக்தி மேலானதென்பது புலனாகும். திருமங்கை மன்னர் ஸ்ரீரங்கத்தை நேரில் கண்டு பாடினார், பாகவதர்களின் பூலோக வைகுண்டமென்று. குலசேகரரோ ஸ்ரீரங்கத்தை நினைத்து நினைத்து மனக்கண்ணால் கண்டு பாடினார். இந்த ஸ்ரீரங்கம் குலசேகரரது! கவியுள்ளத்தின் சௌந்தரியத்திலே—இவரது ஞானபக்தியாகிய காவேரிக் கிடையே—நிர்மாணமாகிறது.

திருவரங்கப் பெருநகருள்,
தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப்
பள்ளிகொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக்
கண்டு கொண்(டு) என்
கண்ணிணைகள் என்றுகொலோ
களிக்கும் நாளே!

என்ற வாக்கைக் குலசேகரர் உள்ளத்திலிருந்து நாதத்தோடு பாயும் ஞான கங்கை யென்றே சொல்லலாம்.

தமிழ் இலக்கணத்துறைகளுக்கு இலக்கியமென்று திருமங்கையாழ்வார் பிரபந்தங்களைக் கூறுவதுண்டு. திருமங்கையாழ்வாரைப்போல் அதிகமாகப் பாடவில்லை குலசேகராழ்வார். எனினும், "பெருமாள் திருமொழி" என்று சொல்லப்படும் இவர் செய்யுள்கள், மேதையின் விசாலத்தாலும் பாவனாசக்தியின் விரிவாலும் ஒரு கடல்போலக் காண்கின்றன. "கவிதை யலைகள் பொங்கியெழும் பக்திப் பாற்கடல்" என்று இவற்றைச் சொல்லலாம்.

திருமங்கை யாழ்வாரைக் "கலைப் பெருமாள்" என்றும், "கவிப்பெருமாள்" என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தப் பட்டங்கள் குலசேகரப் பெருமாளுக்கே விசேஷமாய்ப் பொருந்தும் என்று சொல்லவேண்டும்.

கடந்த வருஷத்தில் 100% அதிகமானது

நாஷனல்

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, கௌன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு :—362, சைனா பஜார் ரோட், எஸ்ப்ளனேட், சென்னை.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் கிளை ஆர்கனேசேஷன் & பிரதம ஏஜன்ஸி காரியாலயங்கள்

Bharata Mani—July 1944

" ராட்டை "

"ஒவ்வொரு குடும்பமும் தத்தமது வீடுகளிலேயே தங்கள் ஆகாரத்தைச் சமைத்துக் கொள்ளுவதுபோல் தங்கள் துணித் தேவைக்குவேண்டிய நூலையும் தாங்களே தங்கள் வீடுகளில் தயாரித்துக்கொள்ள ஒரு பவித்திரமான தீர்மானமேவேண்டும். ராட்டையின்பேரில் என்னையே தியாகம் செய்கிறேன். ராட்டையின் ஒவ்வொரு சுற்றிலும் சாந்தி. இவ்வரிய ராட்டையை இழந்தது காரணமாக இந்தியா அடிமைப்பட நேரிட்டதேபோல் மனமுவந்து இதை உத்தாரணம் செய்வதே இந்தியாவின் சுதந்திரமாகும்."

—மகாத்மா காந்தி - "எங் இந்தியா" 8-12-19[illegible]

ஏமாந்த சோணகிரி

[பொன்னம்மாள்]

திருநாறையூர் என்ற கிராமத்தில் ஒரு அழகான காளி கோயிலிருந்தது. கோயிலுக்கெதிரே திருக்குளமும் அதன் கரையில் ஒரு மாமரமும் இருந்தது. மாமரத்தின் கிளைகள் குளத்தின் பக்கமாகச் சாய்ந்திருந்த படியால் அநேகமாக ஒருவராலும் காய்களைப் பறிக்க முடியாது. அந்தக்காய்கள் மிகவும் ருசியாக இருந்தபடியால் அதற்குத் திருநாற்றுப் பத்திரி மாங்காய் என்று சொல்லுவார்கள்.

திருக்குளத்தின் ஜலம் பளிங்குபோல் தெளிவாக இருக்கும். அதில் மீன்கள் துள்ளி விளையாடுவது ரொம்ப அழகாக இருக்கும். ஆனால் அந்த மீன்களைக் கிராமத்தில் ஒருவரும் பிடிக்கமாட்டார்கள். திருக்குளத்து மீனைச் சாப்பிடுவது மிகவும் பாபம் என்பது ஜனங்களுடைய நம்பிக்கை.

அந்த ஊரில் சோணகிரி என்ற ஒரு ஏழை இருந்தான். அவன் ஒரு நாள் காலையில் திருக்குளத்தில் ஸ்னனம் செய்துகொண்டிருக்கையில் மாமரத்திலிருந்து ஒரு பெரிய மாங்காய் தொப்பென்று அவனுக்குப் பக்கத்தில் விழுந்தது.

மாங்காயைக் கையிலெடுத்ததும் அதன் வாசனை ஜம்மென்று சோணகிரியின் மூக்கைத் துளைத்தது. அப்பொழுது சோணகிரிக்கு ஒரு ஆசை உண்டாயிற்று. மாங்காயும் மீனும் குழம்பு வைத்துச் சாப்பிட்டால் எவ்வளவு ருசியாக இருக்கும்!

அச்சமயம் அவன் எண்ணத்தை அறிந்ததுபோல் ஒரு பெரிய கொழுத்த மீன் உல்லாசமாக நீஞ்சிக்கொண்டு வந்தது. சோணகிரி, சமீபத்தில் எவரும் இல்லாததைக் கண்டு, சட்டென்று தூண்டை வீசி அந்த மீனைப் பிடித்துக் கொண்டான். மாங்காயையும் மீனையும் ஒருவருக்கும் தெரியாதபடி மறைத்து எடுத்துக்கொண்டு வீட்டிற்கு ஓட்டம் பிடித்தான்.

அவ்வளவு பெரிய மீனையும் மாங்காயையும் பார்த்து அவன் மனைவி வள்ளி ஆச்சரியப்பட்டாள். சோணகிரி விஷயத்தைச் சொல்லி ஒருவருக்கும் அந்த சமாசாரத்தைச் சொல்லக்கூடாது என்று சொல்லிவிட்டு வேலைக்குப் போய்விட்டான்.

வள்ளி மாங்காயையும் மீனையும் சேர்த்து மிகருசியாகச் சமைத்துச் சட்டியில் மூடி வைத்துவிட்டுத் தெருவில் போய் தன் புருஷன் வருகையை எதிர்பார்த்திருந்தாள். அன்று சோணகிரி வயலிலிருந்து வர சிறிது நேரமாகிவிட்டது. உள்ளேவந்து எல்லாம் சரியாக இருக்கிறதா என்று வள்ளி கொஞ்சம் மீன் குழம்பை சாப்பிட்டாள். ஆஹா! என்ன ருசி, என்ன மணம்! அவள் ஆயுசிலேயே அவ்வளவு அற்புத ருசியுள்ள குழம்பை அவள் சாப்பிட்டதே இல்லை. பின்னும் கொஞ்சம்தான்

வோமே என்று தன் பங்கு பூராவையும் சாப்பிட்டுவிட்டு வீதியில்வந்து பார்த்தாள். அப்பொழுதும் சோணகிரியைக் காணும். சிறிது நேரங் கழித்து மறுபடியும் வீட்டிற்குள் போனாள். குழம்பு ஆசை அவளை இழுத்தது. புருஷன் கோபித்துக் கொள்வானே என்றும் பயம். இருந்தாலும், "கொஞ்சுண்டு சாப்பிடுவோம். அதிலென்ன குறைந்து விடும்" என்று நினைத்து கொஞ்சம் எடுத்துத் தின்றாள். இப்படியே சட்டியைக் காலி செய்துவிட்டாள். அப்பொழுது சோணகிரி வந்துவிட்டான். வள்ளிக்கு பயமாகிவிட்டது. உடனே ஒரு உபாயம் செய்தாள்.

அன்று சோணகிரிக்கு வேலையில் கவனமே இல்லை. திருக்குளத்து மீனும் மாங்காயுமே நினைவாக இருந்தது. இருந்தாலும் அன்று கட்டாயம் வேலையை முடிக்க வேண்டியிருந்தது. வேலையை முடித்துக்கொண்டு அவசரமாக வீட்டிற்கு ஓடிவந்தான். அவனுக்கு நல்ல பசி. வழக்கமாய் வாசலில் காத்துக்கொண்டிருக்கும் அவன் மனைவியைக் காணவில்லை. வீட்டிற்குள் போனதும் அவன் கண்ட காக்ஷியால் பயந்து போய்விட்டான். வள்ளி தலைவிரித்துக்கொண்டு ஆவேசத்துடன் ஆடிக்கொண்டிருந்தாள். சோணகிரிக்கு பக்தி அதிகம். தன் மனைவிக்கு சாமி வந்துவிட்டது என்று அறிந்ததும் அவன் கைகட்டி, வாய்புதைத்து, பயத்துடன், "என்ன அபராதம் அம்மணீ?" என்று அவள் காலில் விழுந்தான்.

"அடேய், என்னவென்று கேட்கிறாய்? என்னை ஏமாற்றப் பார்த்தாயேடா? யாரிடம் நடக்கும் உன் ஏமாற்று வித்தை! கொண்டாடா! திருநூற்றுப் பத்திரி மாங்காயும் திருக்குளத்து மீனும் கொண்டா! திருநூற்றுப்பத்திரி மாங்காயும் திருக்குளத்து மீனும் கொண்டா?" என்று சத்தமிட்டு வள்ளி ஆவேசத்துடன் கத்த ஆரம்பித்தாள்.

எங்கேயாவது பக்கத்து வீட்டுக்காரர்கள் காதில் பட்டுவிட்டால் ஆபத்தாகுமே யென்று பயந்த சோணகிரி மிகவும் திகிலுடன் "தாயே, அபசாரம் பண்ணிட்டேன். மன்னிச்சுக்கோ. இனி நான் செத்தாலும் உனக்கு அபசாரம் செய்ய மாட்டேன். இப்ப என்ன உத்தரவு?" என்று கேட்டான்,

வள்ளியின் ஆவேசம் சிறிது அடங்கிற்று. "அப்படி சொல்லடா மவனே. நீ ரொம்ப நல்லவன்னு எனக்கும் தெரியும். ஏதோ புத்தி கெட்டு செஞ்சுபுட்டே. போனாப் போவுது. உன் பெண்டாட்டி குழம்பு சட்டிமேல் இன்னொரு சட்டி போட்டு மூடி வைச்சிருக்கா. அதைத் திறந்து பாராமே அப்படியே எடுத்துக் கொண்டுபோய் திருக்குளத்துலே விட்டுடு" என்று உத்தரவிட்டாள்.

செத்தேன் பிழைத்தேன் என்று சோணகிரி குழம்பு சட்டியை மூடியபடி எடுத்துக்கொண்டு போய் திருக்குளத்தின் நடுவில் போட்டுவிட்டு வந்தான். அன்று அவன் வெறும் சாதமும் தண்ணீரும்தான் சாப்பிட வேண்டியிருந்தது.

வள்ளி தன் தந்திரத்தை நினைத்து சிரித்தாள். என்றாலும் பரமசாதுவான புருஷனை ஏமாற்றியதற்கு அவள் மனம் வருந்தாமலில்லை.

"மடம் எதற்கு?"

இப்போது இருக்கும் அலங்கோலங்களில் எது மிகுந்த அபாயத்தைக் கொடுக்கக் கூடியதோ அப்படிப்பட்ட ஒன்றையேனும் எடுத்துக்கொண்டு இடைவிடாமல் வீடுதோறும் சென்றும் கூட்டங்கள் கூட்டியும் இதுவே பகவத் ஸேவை என்ற புத்தியுடன் பெரிதும் ப்ரசாரம் செய்வதற்கு உதவுவதுதான் மடம் சாச்வதமாக இருப்பதற்குச் செய்யும் ஸேவை.

L. 61-50 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED



மற்றொரு இந்திய ஞாபகார்த்த சிலை

மைசூர் சந்தன சோப்

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்:

கவர்ண்மெண்ட் சோப் பாக்டரி, பெங்களூர்